பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 வைகாசி 18 ஜு: ஆகிர்: 12 இதழ்: 109
யாழ்ப்பாணம் செல்வாய்க்கிழமை 31-5-77

அந்நியச் செலாவணி மோசடி:

## சிவானந்தனுக்கு ரூ 35,000 அபராதம்!

கொழும்பு, திங்கள்
அந்நிய செலவணி மோசடி தொடர்பாக விசாரணை நடத்திவரும் குற்றவியல் நீதி ஆணைக்குழு சிவானந்தன் என்பவருக்கு இன்று 35,000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பு வழங்கியது.

சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு கராம்பு ஏற்றுமதி செய்ததாகவும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மின்சாரப் பொருட்களை சட்ட விரோதமாக இறக்குமதி செய்ததாகவும் இவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

தற்போது தெஹ்ரானில் இருக்கும் திரு. சிவானந்தன் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்தார்.

திரு. கணேசலிங்கம், சோமசுந்தரம் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டில் நாளை தீர்ப்பு வழங்கப்படும். (உ)

# வடக்கில் காங். ஆதரவாளர் 10 தொகுதியில் போட்டியிட முடிவு

## உடுப்பிட்டியில் சிறுபான்மைத் தமிழர்

யாழ்ப்பாணம், செவ்.

வடக்கில் 10 தொகுதிகளில் அடுத்த தேர்தலில் அபேட்சகர்களை நிறுத்துவதென சாவகச்சேரியில் நேற்று கூடிய தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்கள் தீர்மானித்துள்ளனர். 6 தொகுதிகளுக்கான அபேட்சகர் முடிவுசெய்யப்பட்டது. கிளிநொச்சி, ஊர்காவற்துறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய தொகுதிகளுக்கான அபேட்சகர்பற்றி நாளை முடிவுசெய்யப்படவிருக்கிறது.

சாவகச்சேரி 'சரஸ்வதி பூங்கா'வில் தமிழ்க்காங்கிரஸ் ஸ்தாபக உறுப்பினர் சட்டத்தரணி ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் டெபகுதியிலுள்ள தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உடுப்பிட்டித்தொகுதியில்சிறுபான்மைத் தமிழரான திரு. எஸ். எஸ். சுந்தரத்தை நிறுத்துவதென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. கோப்பாய்த் தொகுதியில் போட்டியிடுமாறு சபையோர் அவரைக் கேட்டபோது, உடுப்பிட்டி தனது சொந்த இடமென்றும் கடந்த ஒரு வருடகாலத்திற்கு முன்பிருந்தே பிரசாரத்தில் இறங்கிவிட்டதாகவும், அங்கு அதிக வாய்ப்பு இருப்பதாகவும், இக் கூட்டத்தில் கலந்து கொண்ட திரு எஸ். எஸ். சுந்தரம் கூறினர்.

கீழ்க் காணும் தொகுதிகளுக்கு அபேட்சகர்களை நிறுத்துவதென முடிவு செய்யப்பட்டது: யாழ்ப்பாணம்; திரு. குமார் பொன்னம்பலம், சாவகச்சேரி: திரு வே. குமாரசுவாமி, நல்லூர்; திரு. க. சபாரத்தினம், கோப்பாய்; திரு. ரி. பரமானந்தராசா, மானிப்பாய்: திரு. சி. முதலியார்.

### தமிழ் ஈழம்

'தமிழ் ஈழம்' அமைப்பது என்ற லட்சியத்தை முன்வைத்து போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது. தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

தேர்தல் பிரசார வேலைகளை கவனிப்பதற்கு ஒவ்வொரு தொகுதியிலும் ஐவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு நாளை மாலை கோண்டாவிலில் கூடவிருக்கிறது. (க)

## தேர்தல் பிரசாரம்: எம்.ஸி ஆரம்பிப்பு

### காங்கேசன் தொகுதியில் விஜயானந்தன்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத் தொகுதியில் கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் நியமன எம். பியான திரு. எம். சி. சுப்பிரமணியம நேற்றுமுஸ்லிம் வட்டாரத்தில் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கோப்பாய்த்தொகுதியில் திரு. கேசவஞானம்போட்டியிடுவார்

காங்கேசன் துறைத் தொகுதியில் திரு. வி பொன்னம்பலம் போட்டியிட விருப்பம் தெரிவிக்காததைத்தொடர்ந்து அங்கு திரு எஸ் விஜயானந்தனை நிறுத்துவதென்றும் கம்யூனிஸ்ட் கட்சி முடிவுசெய்துள்ளது.

உடுப்பிட்டித் தொகுதியில் திரு பொன். குமாரசாமியை நிறுத்துவதென யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் கட்சிக்கிளை தீர்மானித்துள்ளது. இது தொடர்பாகக் கொழும்பிலிருக்கும் திரு. பொன். குமாரசாமியுடன் வடபகுதிக் கம்யூனிஸ்ட் கட்சியினர் தொடர்புகொண்டுள்ளனர். (க அ)

## 'அமிர்' - சிவா வேண்டுகோள்

கொழும்பு, திங்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள உதயசூரியன்கொடி இயக்கத்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். ஆயுர்மாணவர் 7 பேர்

## சாகும் வரை உண்ணுவிரதம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். லங்கா சித்த ஆயுர்வேதக்கல்லூரியின் நிர்வாக அதிகாரி டாக்டர் அ. கங்காதரனைப் பதவியிலிருந்து ராஜினுமா செய்யக் கோரி 7 மாணவர்கள் நேற்றுக் காலை 6 மணிக்கு சாகும் வரை உண்ணுவிரதம் ஆரம்பித்துள்ளனர்.

கல்லூரி மாணவ மாணவிகளும், பெற்றோர்களும் இவர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மாணவர் சங்கத்தைச் சேர்ந்த சிவகுரு, வே. சிவபாலன், கே. பரமநாதன், எஸ். சிவநாதன், எஸ். அமிர்தலிங்கம், கே. சுந்தரமூர்த்தி ஆகியோரே உண்ணுவிரதம் செய்து வருகின்றனர்.

பொதுமக்களும் மற்றும் கல்லூரி மாணவர்களும் நேற்று வந்து இவர்கள் உண்ணுவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். (அ-க)

### நல்லூர்த் தொகுதி வேட்பாளர்

எனதன்பான நல்லூர்த் தொகுதிப் பெருமக்களின் வேண்டுகோளின் பேரில் நல்லூர்த் தொகுதியில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

இலங்கைநாதன் பாலசுந்தரம்

6322

கூட்டணி அங்கீகரிக்கப்படாவிடின்

## தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் சின்னங்களில் போட்டி!

யாழ்ப்பாணம், செவ்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேர்தல் சின்னமாக 'உதய சூரியன்' சின்னம் பெறுவதில் பெரும் சிக்கல்கள் தோன்றியுள்ளன. இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர்கள் கூட்டணி அரசியல் கட்சி அங்கீகரிக்கப்படாத பட்சத்தில் தமிழரசுக்கட்சியின் 'வீடு' சின்னத்திலும் தமிழ்க் காங்கிரஸின் 'சைக்கிள்' சின்

(8-ம் பக்கம் பார்க்க)

## வழமைபோல் ரயில் சேவை

யாழ்ப்பாணம், செவ்

கடந்த 3 தினங்களாகப் பாதிக்கப்பட்ட ரயில்சேவை இன்றுமுதல் மீண்டும் வழமைபோல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இன்று காலை காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக்கு யாழ். தேவி ஓடும். இதேபோல் இன்றிரவு மெயில் ரயில் சேவையும் நடக்கும்.

### தபால் சேவை சகஜம்

யாழ்ப்பாணம், செவ்

ரயில்வே ஊழியர்களின் சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் காரணமாக ரயில்சேவைகள் முற்றிலும் ஸ்தம்பிக்கப்பட்டுள்ள போதிலும் தபால் சேவை வழமைபோல் இயங்கி வருகின்றது.

வழமைபோல் தபால்சேவை

(8-ம் பக்கம் பார்க்க)

### தமிழ் ஈழ கம்யூனிஸ்ட்கட்சி

யாழ்ப்பாணம், செவ்.

'தமிழ் ஈழக் கம்யூனிஸ்ட் கட்சி' என்றபெயரில், புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. காங்கேசன்துறைத் தொகுதியில் இதற்கு ஆதரவு திரட்டப்பட்டுவருவதாக அறியப்படுகிறது. (க)

## வரி விளம்பரம்

### தேவை

வெளியூரில் வசிக்கும் தனி நபருக்கு நன்கு சமையல் தெரிந்த சமையல்காரர் தேவை. அத்தோடு வயதான பெண் ஒருவரைப் பராமரிக்க ஒரு பெண்ணும் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். டாக்டர் ஞானநாயகம், 88/3, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6318

## பிறின்ஸும் போட்டியில்லை

கொழும்பு, திங்கள்

முன்னாள் ஹபரதுவ எம். பி. திரு. பிறின்ஸ் குணசேகரா இம்முறைத் தேர்தலில் போட்டியிடமாட்டார்.

இதுபற்றி அவரிடம் அபிப்பிராயம் கேட்டபோது குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியில் அங்கத்தவர்கள் சிறையில் வாடும் போது தாம் தேர்தலில் நிற்பது முறையல்ல என்றும், உண்மையான தொரு இடதுசாரி முன்னணி உருவாகததும் காரணம் என்றும் கூறினார்.

## பாஷையூர் அந்தோனியார் திருவிழா

யாழ்ப்பாணம், செவ்

நாளை 1-ம்திகதி இலங்கையின் பிரசித்தி பெற்ற கொழும்பு கொச்சிக்கடை பாஷையூர் அந்தோனியார் ஆலயத் திருவிழாக்கள் ஆரம்பமாகின்றன. நாளைகொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும் இவ்விழா 13-ம் திகதி திருநாள் கொண்டாட்டத்துடன் நிறைவுபெறும். (கி-அ)

ஐ. தே. க. அமைப்பாளர் தாக்குதல்:

# இரு இளைஞர்கள் கைது

நெலியடி, திங்கள்

பருத்தித்துறைத் தொகுதி ஐ. தே. க. அமைப்பாளர் திரு. கே. வீ. சரவணபவானந்தம் வழிமறித்து தாக்கப்பட்டதை அடுத்து இரு வாலிபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலோலி கிழக்கைச் சேர்ந்த காளை என அழைக்கப்படும் கதிர்காமலிங்கம், குடத்தனையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் ஆகிய இருவருமே இச்சம்பவம் தொடர்பாகப் பொலிசாரால் கைது செய்யப் பட்டவர்களாவர்.

கடந்த சனிக்கிழமை காலை கிராமக்கோட்டடிச் சந்தியில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இவ்வாலிபர்களை கிராமக்கோட்டடிச்சந்தியிலிருந்து இருவரதும் கைகளைக்கட்டிப் பொலிசார் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் வரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக இன்னும்சிலசந்தேகநபர்களைத் தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

# "சுதந்திரப்போருக்கு தயாராகும் தேர்தல் இது"

— காசிஆனந்தன்

யாழ்ப்பாணம், செவ்

'இன்று தமிழ்பேசும் இனம் சந்திக்கின்ற தேர்தல், புதினம் பார்க்கின்ற தேர்தலல்ல. விடுதலைவிரும்பிகள் ஒருசுதந்திரப் போராட்டத்துக்கு தம்மைத் தயார் செய்யும் தேர்தலாகும்.'

யாழ்ப்பாணம் ஐந்துசந்தியில் யாழ்ப்பாணத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரனை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. காசி ஆனந்தன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

'இஸ்லாமிய மக்கள் தமது மத மொழி அரபாக இருந்தும் தமது ஊரின் பெயரை பச்சைத்தமிழில் வைத்திருக்கின்றார்கள். இலக்கண, இலக்கிய வரலாற்று வரம்புகளைக்கடக்கடந்து, இனிய தமிழில் எளிய நடையில் அவர்களது கவிதைகள் இருக்கின்றன. சாய்ந்த மருது, கல்முனை, மருதமுனை, ஏறுவூர் என்பது அவர்களது ஊரின் பெயர். பெரியதம்பி, கறுவல்தம்பி, முத்துராஜா என்றும்கூட அவர்களது பெயர். இவைதெல்லாம் அவர்கள் தமிழில் கொண்டுள்ள பற்றை எமக்குக் காட்டுகின்றன.'

ஜனுப் முத்துராஜா பேசுகையில் தமிழ்மக்களின் அவலநிலையை உணர்ந்தே தந்தை செல்வா, பூரணத்துவமான மூன்று தலைவர்களையும் ஒருங்கிணைத்து இறக்குமுன் ஒற்றுமையை ஏற்படுத்தினர். ஆனல் அவர் காட்டிய ஒற்றுமையை வளர்ப்பதற்காகவே தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் வென்ற மூன்று தொகுதியை விட வவனியா என்ற தொகுதியையும் தமிழ்க்காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்டது என்றார்.

திரு. வி. யோகேஸ்வரன் கூறியதாவது: இன விடுதலையைப் பெற்றல் நமக்கென ஒரு நாடு கிடைத்தால் நமது மொழி, கலை, கலாச்சாரம், மதம் அனைத்தையும் வளர்க்கலாம். இது ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்காக நடைபெறும் தேர்தல். ஜனநாயக நாட்டில் எந்தப் பொதுப் பிரச்னையும் தீர்க்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது வழக்கம். அதைப்போல யாழ்ப்பாணத் தொகுதியில் என்னை விடுதலை விரும்பிகள் என்னையே நிறுத்தியுள்ளார்கள். நான் அதற்காக விசுவாசமாக உங்களுடன் போராடவுள்ளேன். நீங்கள் இன்று ஒரு புனிதஇயக்கத்துக்கு ஆதரவு வழங்க கடமைப்பட்டு இருக்கின்றீர்கள்.

இக்கூட்டத்தில் திரு. வி. தருமலிங்கம், வண்ணை ஆனந்தன், பொன். மதிமுகராசா, திரு. செந்தூர்ராசா, திரு. அந்தோனிப்பிள்ளை, திரு. தியாகராசா, அலொசியஸ் உட்படப் பலர் உரையாற்றினர். (கெ)


மலேஷியன் கைமார்க்
சாம்பிராணி
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5


## சங்கானை ப. நோ. கூ. சங்கம் (வ. உ)

# கேள்வி விளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பெற்றுள்ளது.

1. சணல் தும்புக் கயிறு 509 றுத்தல்
2. கடம்புக் கயிறு 714 ,,
3. துணிகளுக்குப் போடும் சாயவகை,
4. இரசாயன வகைகள்.
   லொறிகளிலும் வான்களிலும் கழித்த வில்லுத் தகடுகள், றிம்கள், யொக்கமா பிறிஸ்டோன் றயர்கள், பிற உதிரிப்பாகங்கள்.
5. விசை இதளிப்பான்கள் (அஸ்பிபோல)
6. புகையிலை உலர்த்த தேவையான பனம்பாணி – 115 கலன்
7. மின்சார உபகரணங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இருசு டைனமோ ஆமெச்சர் 5 றி | -1 |
| 2. | ,, சில்ட் பம் லைற்று 24 வி | -1 |
| 3. | ,, பிஸ்ரன் | -1 |
| 4. | ,, பின் கப் ஒயில் சீல் 5 றி | -1 |
| 5. | ,, வில்லு காங்கர் | -1 |
| 6. | பென்ஸ் பழைய மொடல் லொறி-பிறேக் லைனிங் | -1 |
| 7. | ,, ,, ,, சைலன்சர் இரும்டகோஸ் | -1 |
| 8. | ,, ,, வில்லுதாங்கர் முன் | -2 |
| 9. | பிறேக் லைனிங் செற், மொறிஸ் ஒக்ஸ்போட்வான் | -1 |
| 10. | வில்லுத்தகடு சேவலெற் லொறி முன்பக்கம் | -1 |
| 11. | எக்சோஸ்ற் வால்வு, செவலெற் | -2 |
| 12. | முன் அங்கர், பென்ஸ் லொறி | -4 |

விண்ணப்பங்கள், பொதுமுகாமையர், சங்கானை ப. நோ கூ. சங்கம், சங்கானை என்ற் விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் 5-6-77 நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். தபாலில் இடதுபக்கம் மேல்மூலையில் 'கேள்விப் பத்திர விண்ணப்பம்' என்று எழுதப்படல் வேண்டும்,

வே். கந்தசாமி
பொதுமுகாமையர்.

28-5-77 6321

## மயில்வாகனம் பிரசாரம் ஆரம்பித்தார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சாவகச்சேரித் தொகுதியில் தமிழர் சுயாட்சிக்கழக அபேட்சகராக போட்டியிடும் சட்டத்தரணி சி. பொ. மயில்வாகனம் நேற்று தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

வரணி, குடமியன், கொடிகாமம், மீசாலை ஆகிய இடங்களில் இளைஞர்களுடன் சென்று அவர் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

"தமிழர் சுயாட்சிக் கழகம் தான் தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுக்கும்" என்று பிரசாரத்தை ஆரம்பித்துவைத்தபோது திரு. மயில்வாகனம் கூறினார். (க)

சமசமாஜக்கட்சி

## ஊர்காவற்றுறை கிளிநொச்சி தொகுதிகளில் போட்டியிடும்

யாழ்ப்பாணம், செவ்.

வடக்கில் சமசமாஜக் கட்சி சில தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்துள்ளதாக சமசமாஜகட்சி வடபிரதேச செயலாளர் திரு வி. பொன்னம்பலம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறைத் தொகுதியில், பட்டதாரி ஆசிரியரான திரு. கே. கனகரத்தினம் சமசமாஜக்கட்சி அபேட்சகராக போட்டியிடுவார்.

கிளிநொச்சி தொகுதியில், விவசாயியான திரு. எஸ். தில்லையம்பலம், சமசமாஜ கட்சி அபேட்சகராக போட்டியிடுவார்.

நல்லூர் தொகுதியிலும் சமசமாஜகட்சி போட்டியிட முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார். (க)

# "பிரிவினைமனப்பான்மையே அடிமைத்தனத்துக்கு காரணம்"

யாழ்ப்பாணம், செவ்வாய்

"தமிழன் உலகின் பல பாகங்களிலும் சிந்திச்சிதறி வாழ்கின்ருன். தமிழன் இல்லாத நாடே உலகத்தில் இல்லை. இருப்பினும் அவன் அங்கெல்லாம் அடிமையாக வாழ்கின்ருனேயொழிய ஆளையிடுபவனுக வாழவில்லை. இதற்குக் காரணம் தமிழர்க்கென ஒரு சொந்த நாடு இல்லாததே."

இவ்வாறு ஈச்சமோட்டை இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வாமதேவன் சுண்டிக்குளி வட்டார விடுதலைக் கூட்டணிக் கிளைத் திறப்புவிழாவில் பேசுகையில் கூறினார். சுண்டிக்குளி விடுதலைக் கூட்டணிக் கிளை யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் திரு. வெற்றிவேலு யோகேஸ்வரனால் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர் திரு. கு. யோ. பற்றிமாகரனின் இல்லத்தில் திறந்துவைக்கப்பட்டது.

திரு. வாமதேவன் தொடர்ந்து பேசுகையில் "யாழ்ப்பாணத்தில் உலக அறிஞர்கள் பலர் கூடித் தமிழை ஆராய்ந்த வேளையிலே அநியாயமாக 9 உயிர்கள் பலிகொள்ளப்பட்டன. இதனைக் கண்ட உலகத் தமிழர்களால் கண்ணீர் விட முடிந்ததே தவிரத் தட்டிக்கேட்க முடியவில்லை" என்றார்.

அடுத்துப் பேசிய தர்மரத்தினம் தமது உரையில் "காங்கேசன் இடைத் தேர்தலால் தமிழ்மக்களின் மனநிலையை மட்டுமே உணரமுடிந்தது. ஆனல் இத்தேர்தல் தமிழரின் தலைவிதியையே நிர்ணயித்து விடும்" என்றார்.

சட்ட மாணவன் அலோசியஸ் பேசுகையில் "நாம் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வாழ்வதற்குக் காரணம் எம்மிடையே இழையோடியுள்ள சாதிசமய வேறுபாடுகளே. இவைகளைத் தகர்த்தெறிந்து கிறிஸ்தவம் இந்து சமயபேதங்களை மறந்து தமிழன் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளை என்பதனை உலகுக்கு உணர்த்திட வேண்டும். கூட்டணியின் இலட்சியம் அதுவே" என்ருர்.

யாழ்ப்பாணத் தொகுதிக் கூட்டணி அபேட்சகர் திரு. வெ. யோகேஸ்வரனும் பேசினுர்.

திரு. வென்டர்க்கோன் நன்றி தெரிவித்துப் பேசினுர்.

தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த சபா. செந்தில்ராசா, திரு. சேவியர், சமாதான நீதவான் ஞானப்பிரகாசம் உட்படப் பலர் இக்கூட்டத்தில் பேசினர். (க-அ)

## 'தவம்' இருக்கும் வாகனங்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள எரிபொருள் விநியோக நிலையத்தில் ஒவ்வொரு வாகனத்துக்கும் ஒன்றரைக் கலன் பெற்ருேல்வீதம் வழங்கப்படுகின்றது. பெற்ருேலுக்காக நூற்றுக்கதிகமான வாகனங்கள் வரிசையாக தவம் கிடக்கின்றன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வீதிகளில் குறைவான வாகனங்களையே காணக்கூடியதாக இருக்கின்றது. (கு)

## அலங்கார உற்சவம்

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்மன் கோயில் அலங்கார உற்சவம் கடந்த ஞாயிறன்று ஆரம்பமாகியுள்ளது. தினமும் மாலைப் பூசையைத் தொடர்ந்து அளவையூர் அருட்கவி சி. விநாசித்தம்பியின் சங்கீத கதாப்பிரசங்கமும் ஆசிரியர் கேஞ. நடராசா, ந. சிவசண்முகமூர்த்தி ஆகியோரின் சமய விரிவுரைகளும் நடை பெற்று வருகின்றன.

பத்தாவது தினமான செவ்வாய்க்கிழமை மண்டலாபிஷேகமும் நடைபெறும். (இ)

## திருவின் கட்டுப்பணம்

சுழிபுரம், திங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தின் சொந்தக் கிராமமான பண்ணாகத்து மக்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியில் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. தா. திருநாவுக்கரசுவின் கட்டுப்பணத்தைக்கட்டவுள்ளனர். (இ)

## தந்தைபெயரால் அன்னதானம்

யாழ்ப்பாணம், செவ்

தந்தை செல்வாவின் 31ம் நாளை முன்னிட்டு சந்திரன் சயிக்கிள் வேர்க்ஸ் உரிமையாளர்களின் ஆதரவில் பஸ்ரியன் அச்சச் சந்தியில் அன்னதானம் வழங்கப்பட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணி யாழ் தொகுதி வேட்பாளர் சட்டத்தரணி வெற்றிவேலு யோகேஸ்வரன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. விசேஷ கொட்டகை அமைக்கப்பட்டு இவ்வைபவம் இடம் பெற்றது. (கி-அ)

## யோகேசுக்கு கட்டுப்பணம் கையளித்தனர்

யாழ்ப்பாணம், செவ்

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் தொகுதி வேட்பாளர் திரு. வெற்றிவேலு யோகேஸ்வரனிடம் அவரது கட்டுப்பணத்தை வண்ணை சிவன் கோவிலடி இளைஞர் பேரவையினர் திரு. சோ. சிவரெத்தினம் தலைமையில் கையளித்தனர்.

இது தொடர்பாக நடந்த வைபவத்தில் மதிமுகராசா, வண்ணைஆனந்தன், செந்தில்ராசா உட்படப் பலர் உரையாற்றினர் (இ)

## பணம்கட்ட போட்டி

நெல்லியடி, திங்கள்

உடுப்பிட்டித் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. இராசலிங்கத்தின் தேர்தல் கட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டித் தொகுதித் தமிழ் இளைஞர் பேரவையினர், உடுப்பிட்டி வட்டார ஆசிரியர் ஒன்றியம், அல்வாய் மனோகரா ச. ச. நிலையம் ஆகியவை போட்டி போட்டு முன்வந்துள்ளன.

## இந்திராவுக்கு கடிதம் எழுதியவர் தற்கொலே!

சென்னே, மே. 30 விஞேபாஜியின் மாணவர் ஒருவர் இந்திராவைக் கண்டித்துக் கடிதம் எழுதிய பயத்தில் தமக்குத்தானே தீமூட்டித் தற்கொலேசெய்து கொண்டார்.

இச்செய்தியைப் பத்திரிகைகள் பிரசுரிக்காதவாறு தணிக்கை செய்யப்பட்டது. இத்தகவலே தி. மு. க. தலேவர் திரு. மு. கருணுநிதி தெரிவித்தார்.

''இந்தியாவின் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சர்வாதிகாரம் இந்தியாவை அழிக்கும். அதை நான் பலமாகக் கண்டிக்கிறேன்'' இவ்வாறு இந்திராவுக்கு செல்வன் சர்மா என்ற அந்த மாணவர் கடிதம் எழுதினுராம்.

மேலும் அக்கடிதத்தில் ''இதை எழுதியதற்காக நீங்கள் என்னேக் கைது செய்ய முன்பு நான் தற்கொலே செய்கிறேன்'' எனவும் குறிப்பிட்டிருந்ததாகவும் திரு. கருணுநிதி கூறினுர். (கி இ)

# பிறநாட்டு விவகாரங்களில் இந்தியா தலேயிடாது

## மொரார்ஜி கூறுகிறுர்

புதுடில்லி, மே 30 வெளிநாடுகளின் உள்விவகாரங்களில் இந்திய அரசு தலேயிடமாட்டாது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் ராஞ்சியில் கூறினுர்.

திரு. மொரார்ஜி ராஞ்சியில் தேர்தல்சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டு பல தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் பேசிவருகிறுர்.

அடுத்த மாதம் 10 மாநிலங்களிலும் 3 யூனியன் பிரதேசங்களிலும் நடைபெற உள்ள தேர்தல்களில் அநேகமான மாநிலங்களில் ஜனதா கட்சி பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஆட்சி அமைக்கும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை தமக்கு உண்டென்றும் திரு. மொரார்ஜி கூறியுள்ளார். (இ)

## அமெரிக்க-ரஷ்ய ஒப்பந்தம்

ஜெனீவா, மே 30 சுற்றுச்சூழ்நிலே மாற்றுமுறைகளேப் பகைநோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் ஒரு ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் கையெழுத்திட்டுள்ளன. இவையே இவ்வாறு ஒப்பமிடும் முதல்நாடுகள் ஆகும்.

அமெரிக்காவின் சார்பில் அமெரிக்க வெளியுறவுஅமைச்சர் திரு. சைரஸ்வான்ஸும் ரஷ்யாவின் சார்பில் அதன் வெளியுறவு அமைச்சர் குரோமிக்கோவும் கையெழுத்திட்டனர். (இ)

## 3,50,000 பேருக்கு கருத்தடை

சென்னே, மே 30 இவ்வாண்டு தமிழ்நாட்டில் 35 லட்சம் பேருக்குக் கருத்தடைச் சத்திரசிகிச்சை செய்வதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இக் கருத்தடை எவ்வித கட்டாயமுமின்றியே நடாத்தப்படும்.

இத்தகவலேத் திருச்சி மருத்துவ மனேயின் வெள்ளி விழாவில் கலந்துகொண்டு பேசிய கவர்னரின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேசு வெளியிட்டார். (கி-இ)

"உண்மையான சோஷலிஸத்தில்

# ஜனதா அரசுக்கு என்றும் நம்பிக்கைஉண்டு"

புதுடில்லி, மே 30 ஜனதா கட்சி அரசு உண்மையான சோசலிசத்திலும் கலப்பு பொருளாதாரத்திலும் மிக்க நம்பிக்கைகொண்டு ஆட்சிசெலுத்திவருகிறது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் ராஞ்சியில் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஜனதா அரசாங்கம் சோசலிசத்தில் நம்பிக்கை வைத்து கலப்பு பொருளாதார முறையைக் கடைப்பிடித்துவருகிறது.

அரசு சோஷலிசப்பாதையிலிருந்து விலகி முதலாளித்துவப் பாதைக்கு மாறுகிறது என்று பலர் பொய்ப்பிரசாரங்களே மேற்கொண்டுவருகின்றனர். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்றும் பிரதமர் கூறினுர்.

## தேர்தல் ரத்து

புதுடில்லி, மே 30 அடுத்தமாதம்தேர்தல்நடைபெற உள்ள பஞ்சாப் மாநில சட்டசபைத் தொகுதி ஒன்றில் தேர்தல் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இத்தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட இருந்த ஒருவர் மரணமானதையடுத்தே தேர்தல் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இத் தொகுதிக்கான தேர்தல் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## 'பேய், பூதம்!'

சென்னே, மே 30 இந்தியாவில் அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்தபோது தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'முரசொலி' பத்திரிகையில் ''பேய்'', 'பூதம்', 'பிசாசு' ஆகிய சொற்களே பிரசுரிக்க வேண்டாம் என்று தணிக்கைசபை உத்தரவிட்டிருந்ததாம்.

இத் தகவலே முன்னுள் தமிழக முதல்வர் திரு. மு. கருணுநிதி தெரிவித்தார்.

'பேய்', 'பூதம்' போன்ற சொற்கள் திருமதி இந்திராகாந்தியை குறிப்பதாகஇருக்கின்றன என்று தணிக்கைசபையினர் கருதியே அச்சொற்களேப் பிரசுரிக்க அனுமதிக்கவில்லே என்றும் திரு. கருணுநிதி தெரிவித்தார்.

'முரசொலியில்' காலஞ்சென்ற காமராஜரை பெருந்தலேவர் என்று எழுதியதையும் பா. இராமச்சந்திரனின் பெயரையும் பிரசுரிக்கக்கூட தணிக்கசபையினர் அனுமதிக்கவில்லேயாம். [இ]

'சுதந்திர இனமாக

# நாம் வாழ்வதா இல்லேயா என்பதைத்தீர்மானியுங்கள்'

— மு. சிவசிதம்பரம்

## குமார் விவகாரம் பற்றியும் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ். 'நம்தலேவர் ஜி.ஜி.யின் புதல்வர் குமார் பொன்னம்பலத்திற்கு ஒரு தொகுதியை பெற்றுக்கொடுக்க தமிழர் விடுதலேக் கூட்டணி நியமனக் குழுவில் பெரும் முயற்சி எடுத்தேன். ஆனல் அது கைகூடவில்லே.'

கடந்த சனியன்று யாழ். முற்றவெளியில் நடந்த தமிழர் விடுதலேக் கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழர் விடுதலேக் கூட்டணிசெயல் அதிபர்களில் ஒருவரான திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினுர்.



கூட்டணி உபதலேவர் திரு. எஸ். தம்பித்துரை தலேமையில் நடந்த கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது: குமார் பொன்னம்பலத்திற்கு ஒரு தொகுதி பெற்றுக்கொடுக்க நான் எவ்வளவுபாடுபட்டேன்என்பதை, கூட்டணி நியமனக்குழு உறுப்பினர்களுக்குத் தெரியும்.

'நாம் எப்படி தொகுதிகளே ஒதுக்கிரேம் என்பது உங்களுக்குத் தெரியவேண்டும்.

'இடதுசாரி ஐக்கிய முன்னணியில், சமசமாஜகட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும், வேறு சிலரும் இருக்கின்றனர். இவர்கள் தொகுதியை ஒதுக்கும்போது, முதலில் அந்தந்தக்கட்சிகள் வெற்றிபெற்ற இடத்தைஒதுக்கி மற்ற தொகுதிகளே வெற்றிபெறும் வாய்ப்பை அறிந்து சுமுகமாக ஒதுக்கிறுர்கள். இதேபோலத்தான் கடந்த தேர்தலில் தமிழ்காங்கிரஸ் வெற்றிபெற்ற நல்லூர், வட்டுக்கோட்டை, கிளிநொச்சி தொகுதிகள் எங்களுக்கு ஒதுக்கப்பட்டன. அத்துடன் வடக்கில் மேலதிகமாக கிடைத்துள்ள புதியதொகுதியான வவுனியாவும் தமிழ்க் காங்கிரஸிற்கு கிடைத்திருக்கிறது. இதற்காக நான் தமிழரசுக் கட்சியினருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்லூர் தொகுதியில் தேர்தலில் போட்டியிடக்கூடிய தகுதியுள்ள பலர் இருக்கின்றுர்கள் ஆனுலும் தமிழர் கூட்டணியின் ஒற்றுமையைக் கருதி நல்லூர் தொகுதி எனக்கு ஒதுக்கப்பட்டது. கூட்டணிக்காக அயராது உழைக்கும் திரு. ஆலாலசுந்தரம், திரு. விஸ்வநாதன் ஆகியோர் நல்லூர் தொகுதியை எனக்கு விட்டுத்தந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உடுப்பிட்டி தொகுதியை நண்பர் ஜெயக்கொடி சிறுபான்மைத் தமிழர்களுக்காக விட்டு பெருந்தியாகம் செய்திருக்கிறுர். அவரின் பெருந்தன்மைக்கு எதுவும் ஈடாகாது.

சுதந்திர இனமாக நாம் இந்நாட்டில் வாழ்வதா? இல்லேயா? என்பதற்கு நீங்கள் இத்தேர்தலில் தீர்ப்பளிக்கவேண்டும்.

இத்தேர்தலில் முஸ்லிம் ஐக்கிய முன்னணியும், எம்முடன் சேர்ந்து போட்டியிடுகிறது. முஸ்லிம் மக்களுக்கு இந்த அரசு செய்த கொடுமையினுல் இந்த நிலேமைஏற்பட்டுள்ளது.

70ம் ஆண்டு தமிழரசும் தமிழ்க்காங்கிரஸும் வெவ்வேறுகொள்கைகளுடன் தனித்தனியே போட்டியிட்டது. இத்தேர்தலில் கூட்டணி என்ற ஒரே இயக்கமாக ஒரே கொள்கையுடன் போட்டியிடுகின்றேம். கூட்டணிதான் தமிழினத்தின் ஒரே ஒரு விடுதலே இயக்கம் ஆதலால் தமிழ்மக்கள் கூட்டணிக்கு சகல ஆதரவுகளேயும் வழங்கி கூட்டணி அபேட்சகர்கள் சகலரையும் தேசியஅரசுப் பேரவைக்குஅனுப்பிவைக்கவேண்டும்.

திரு அ அமிர்தலிங்கம்தமிழரசு கட்சியை அழித்துவிட்டதாக் தயாட்சி கழகத் தலேவர் திரு. வ. நவரத்தினம் கூறிவருகிறுர். தமிழ்க் காங்கிரஸை, நான் அழித்து விட்டதாக, திரு. குமார் பொன்னம்பலம் கூறிவருகிறுர். தாங்கள் நினேத்தபடி அவர்கள் இப்படிக் கூறுகிறுர்கள். ஆனுல் இதிலுண்மை இல்லே. தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தவதற்காகவே இரு கட்சிகளேயும் சேர்த்து கூட்டணி அமைத்தோம். இன்று தமிழ்இனத்தின் ஒரே இயக்கமாக கூட்டணிவிளங்குகிறது'' (க)

# எம்ஜிஆர் கட்சிக்கு அ.தி.மு.க. எதிர்ப்பு

சென்னே, மே 30 எதிர்வரும் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் எம். ஜி. ஆரின் அனேத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக கோவை செழியனின் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் பிரசாரம் செய்யும்'

இத்தகவலே அ. தி. மு. க. தலேவரான திரு. கோவை செழியனே தெரிவித்தார்.

அ. இ. அ. தி. மு. கவுக்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்கும் எதிராக தேர்தல் பிரசாரத்தில் தமது கழகம் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தை திரு. எம். ஜி. ஆர். அனேத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் எனப் பெயர் மாற்றியதை ஆட்சேபித்தே திரு. செழியன் எம். ஜி. ஆரை விட்டுப்பிரிந்து தொடர்ந்து அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயருடன் தமது கட்சியை இயக்கிவருவது தெரிந்ததே. (இ)

## குமாருக்கு கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணித் தலேவர் திரு குமார் பொன்னம்பலத்தின் கட்டுப்பணத்தை 3000 வாலிபர்கள் செலுத்துவார்கள்.

யாழ்.மாநகரசபை வட்டாரரீதியாக இக் கட்டுப்பணம் சேர்க்கப்பட்டு வருகிறது. தலேக்கு 25சதம் முதல், 1 ரூபா வரை . சேர்க்கப்பட்டு திரு குமார் பொன்னம்பலத்திடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது (க)

## இணைந்து செயல்படும்

(வரணிநிருபர்)

சாவகச்சேரி தென்னகத்தாரகை சனசமூக நிலேயத்திலிருந்து பிரிந்து சென்று உதயதாரகை எனும் பெயரில் இயங்கிவரும் விளேயாட்டுக் கழகம் சாவகச்சேரி நகரமத்தியில் ஒற்றுமையை வளர்ப்பத பொருட்டு, மீண்டும் தாய்ச்சங்கத்துடன் இணேந்து இயங்க விருப்பம் தெரிவித்துள்ளது.

பொது மக்களின் நல்ல அபிப்பிராயத்தைப் பெற்று, வளர்ந்துவரும் தென்னகத்தாரகை சனசமூக நிலேயத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நடக்கவிருக்கின்றது.

### மணிவாக்கு

பொறுமையாலும் சமத்துவநோக்கினாலும் எய்த முடியாதது எதுவுமில்லை. நாளாந்த வாழ்க்கையனுபவத்தால் இவ்வுண்மையைச் சரியென அறிந்துகொள்ளலாம்.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

THE EELANAADU

# நம்பிக்கையூட்டும் அறிகுறிகள்

உண்மையான காந்தியவாதி எப்படி இருப்பார்? அவரது இலட்சணங்கள் என்ன?

தூய்மையான வெண் கதர் ஆடையும், தலையிலே காந்திக்குல்லாயும் அணிந்துகொண்டு, எதற்கெடுத்தாலும் காந்திய தத்துவங்களை மேற்கோள்காட்டிப் பேசிக்கொண்டிருப்பவர்கள் எல்லாருமே உண்மையான காந்தியவாதிகள் தாமா?

இப்படியான ஒருவர் ஒருவேளை காந்தியவாதியாக இருக்கலாமேயொழிய நிச்சயித்துக் கூறிவிடமுடியாது.

உள்ளத்தால், உணர்வால், செயலால், எவர் காந்திய நெறிகளைக் கடைப்பிடிக்கின்ருரோ கடைப்பிடிக்கமுயல்கின்ருரோ அவரேதாம் காந்தியவாதி என்றுகூறிக்கொள்ள தகுதியுடையவர்.

இந்தியப் பிரதமமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் அவர்களின் சமீபகால நடவடிக்கைகள் நம்மை மேற்கண்டவிதத்தில் சிந்திக்கத் தூண்டுகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டுக்கு தேர்தல் பிரசாரத்துக்காக வந்த திரு. தேசாய், ஏனைய சாதாரண அரசியல்கட்சித் தலைவர்களைப் போல் பிரயாணிகளோடு பிரயாணியாக விமானத்தில் சென்னை வந்து இறங்கினுர்!

பிரதமர் என்ற முறையில் ஒரு விசேஷ விமானத்தையே அவர் பயன்படுத்தியிருக்கமுடியும். அமைச்சர்களும் தலைவர்களும் எளிமையாக வாழவேண்டும் என்பது மட்டுமல்ல, மக்கள் சொத்துக்களை சொந்த நலனுக்கோ கட்சி நலனுக்கோ பயன்படுத்தலாகாது என்று பிரசாரம் செய்வதோடு நில்லாமல் திரு. தேசாய் நடைமுறையில் அதனைச் செய்து காட்டவும் துணிந்திருக்கிருர் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

காந்தியநெறிகள் நடைமுறைக்கு சாத்தியமற்றவை என்று தற்கால இளம் சிந்தனையாளர்கள் பேசிவருவதையும் வாதிப்பதையும் பார்க்கின்ருேம்.

காந்தியவாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் முதிய தலைமுறையினர் காந்திய தத்துவங்களை செயலில் கடைப்பிடித்துக் காட்டத் தவறுவதே இளைஞர்களின் இவ்வாருன சிந்தனைப்போக்குக்கு அடிப்படைக்காரணம் எனலாம்.

இளைஞர்களின் இப்போக்கை மாற்ற காந்திய நெறிகள் நடைமுறைக்கு சாத்தியமானவைதான் என்பதை நிலைநாட்டவேண்டியது முதிய தலைவர்களின் கடமை. அவ்வாறு செய்யமுடியாதபட்சத்தில் அவர்கள் கதர் அணிவதிலும் குல்லாய்போடுவதிலும் அர்த்தமில்லை. இதனை நன்கு உணர்ந்தவர் திரு. தேசாய். அத்துடன் அதிர்ஷ்டவசமாக காந்திய நெறிகளையே தம் உயரிய லட்சியமாகக்கொண்ட சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இவர்களுக்கு வழிகாட்டியாகக் கிடைத்திருக்கிருர்.

மனித சமுதாயத்தின் மேன்மைக்காக, குறிப்பாக பாரத மக்களின் உயர்வுக்காக, சொந்த வழ்வையே சத்திய சோதனைக்குள்ளாக்கிக்கொண்டவர் மகாத்மா காந்தி. அந்த மகான் வகுத்துக்காட்டிய நெறிகளை பொதுவாழ்வில் செயற்படுத்தி நடைமுறை சாத்தியமாக்கிக் காட்டவேண்டியது அவர் வழிவந்த தலைவர்களின் கடமை.

அந்த முயற்சியில் இந்தியத் தலைவர்கள் இப்பொழுது ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாகும். பாரதத்தில் மீண்டும் காந்தியநெறிகள் தழைத்து வளர்வதற்கு இது ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்என்பதில் சந்தேகமில்லை.

## இளைஞர் சங்க ஆண்டுவிழா

தெல்லிப்பழை, திங்கள்

வீமன்காமம் இளைஞர் சங்கத்தின் 32-வது ஆண்டு விழா திரு. க. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட திட்டமிடல் பகுதி உதவி அத்தியட்சகர் திரு. க. சு. சண்முகலிங்கம், இளைஞர் சங்கத்தின் சேவைகளை குறிப்பிட்டுப் பேசுகையில் இயல். இசை, நாடக வளர்ச்சி, விளையாட்டுத்துறை சிரமதான வேலைபோன்றவற்றில் இளைஞர்கள் அதிக முன்னேற்றம் காட்டுவது குறித்து பாராட்டினுர்.

நிலையச் சிறுவர்கள் 'ஒளி அலைகள்' என்ற நாடகமும், 'பக்தகுசேலர்' பற்றி வில்லிசையும் நிகழ்த்தினர், முடிவில் இளைஞர்களின் 'புதிய சொர்க்கம்' என்னும் நாடகமும், இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஈ)

## ஐ. தே. கட்சிக்கு உடுகம ஆதரவு

கொழும்பு, திங்கள்

முன்னுள் மாத்தளை எம். பி மேஜர் ஜெனரல்றிச்சார்ட் உடுகம, எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிப்பார்.

ஸ்ரீ லங்கா விமுக்தி பலவேகயவின் தலைவரான உடுகம மேஜர் இது பற்றித் தெரிவிக்கையில் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என்றும் ஆனுல் தமது முழுச் சக்தியையும் ஐக்கிய தேசியக்கட்சியின் வெற்றிக்குப் பயன்படுத்தப் போவதாகவும் கூறினுர்.

ஸ்ரீ. ல. சு. கட்சி அபேட்சகராக 1980-ல் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், உணவு நெருக்கடி காரணமாக கட்சியிலிருந்து ராஜினுமாச் செய்து புதுக்கட்சிஆரம்பித்தவர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

### ஆசிரியருக்குக்கடிதம்:

# சிறுபான்மைத் தமிழர்பிரதிநிதித்துவம்: கூட்டணியின் பெருந்தன்மை

கடந்த வருட சரித்திரப் பிரசித்திபெற்ற தமிழர்விடுதலைக் கூட்டணியினரின் வட்டுக்கோட்டை மாநாட்டில் 'தீண்டாமை ஒழிப்பு' பிரகடனத்தினுல் தமிழ்மக்கள் அனைவரும் இனிமேல்சிறுபான்மைத் தமிழ் சமூகத்தினரையும், தமிழ்த் தாயின் சமமானபிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றனரெனப்பகிரங்கப்படுத்தியது எந்த ஒரு சிறுபான்மைத் தமிழ்மகனுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய ஒரு நற்செய்தியாகும்.

இத்தீர்மானத்தை இதயசுத்தியுடன் நிறைவேற்றும் முகமாக முதற்படியாக தமிழர் விடுதலைக்கூட்டணியினர், சிறுபான்மைத்தமிழரின் பிரதிநிதித்துவம் தேசியபேரவையில் பிரதிபலிக்க வேண்டுமெனும் நோக்கத்துடன், உடுப்பிட்டித் தொகுதிக்கு திரு. இராசலிங்கத்தை எதிர்வரும் தேர்தலில் வேட்பாளராக நியமித்தது. இனிமேல் சாதி சமய வேறுபாடின்றி தமிழினம் வாழ வேண்டுமெனும் உன்னத கொள்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

எமது மக்களுக்கு எஞ்சியிருக்கும் இன்னும் சில பாகுபாடுகளைப் போக்குவதற்கு இனிமேல் தேசிய அரசுப் பேரவையில் நியமன அங்கத்தவர்களுக்கு இடமிருக்க இலங்கை அரசியல் சாசனத்தில்வசதியை ஏற்படுத்தாத காரணத்தினுலும், எமக்கென ஒரு தொகுதியைப் பிரித்துக் கொடுக்கத் தொகுதிநிர்ணயக்குழு மறுத்துவிட்டதாலும் ("இனிமேல் சிறுபான்மைத் தமிழருக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் தேவையென்ருல் அவர்கள் அரசியல்கட்சிகள் மூலம் தான் பெறவேண்டியதாயிருக்கும்'' என அவ்வறிக்கையில் கூறப்பட்ட பின்பு) இனிமேல் தமிழினத்தின் அமோகசெல்வாக்கைப்பெற்றிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தான் இக்குறையை நிவர்த்தி செய்யக் கடமைப்பட்டிருக்கிருர்கள். இப்பொறுப்பை இவர்கள் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டது மிகவும் பாராட்டத்தக்கவிஷயமாகும்.

உடுப்பிட்டியில் தேர்தலில் நிற்கும் திரு. இராசலிங்கம் தெரிவுசெய்யப்பட்டால்,இவர் உடுப்பிட்டித்தொகுதிக்கு மாத்திரமல்ல, இலங்கை வாழ் சிறுபான்மைத்தமிழரின் பிரதிநிதியாகத்திகழவிருக்கிருர். இதன் காரணமாகத்தான், சிறுபான்மைத் தமிழ் சமூகத்தினரைக் கௌரவிக்குமுகமாக ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, சுயாட்சிக்கழகம், திரு. சுந்தரலிங்கத்தின் கட்சி ஆகிய இக்கட்சிகள் அனைத்தும் இத்தொகுதியில் தங்கள் வேட்பாளர் ஒருவரையாவது நியமிக்கவில்லை. இச்செய்கை இவர்களின் பெருந்தன்மையை உலகத்திற்கு எடுத்துக்காட்டுகிறது.

ஆனுல் சிறுபான்மைத் தமிழர் பிரச்னைகளில் மிகவும் ஆர்வம் காட்டிவந்த கம்யூனிஸ்ட் கட்சியானது இத்தொகுதியில் ஒரு பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளரை நியமிக்க அங்கிகாரம் வழங்கியது மிகவும் வேதனைக்குரிய அதிர்ச்சிதரும் செய்தியாகும்.

இந்தத் தொகுதியில் எந்த ஒரு பெரும்பான்மைத் தமிழ் மகனும் போட்டியிடத் தீர்மானித்தால், இப்படிப்பட்டவர்கள் சிறுபான்மைத் தமிழரை இன்னும் ஒதுக்கிபுறக்கணித்து வைக்க வேண்டுமெனும்கொள்கையைத்தான் கடைப்பிடிக்கிருர்களென நாம் வெட்கத்துடன் கூறவேண்டியதாயிருக்கிறது.

அத்துடன் இத்தொகுதியில் வேறு எந்த ஒரு சிறுபான்மைத் தமிழ்மகனும் போட்டியிட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தங்களது அபிமானத்துக்குரிய திரு. ஜெயக்கொடியையோ, திரு மு. சிவசிதம்பரத்தையோ இங்கு நிறுத்தாது இத்தொகுதியில் தாங்கள் தேர்ந்தெடுத்த சிறுபான்மைத்தமிழ் வேட்பாளரை நியமித்திருக்கும் பொழுது, வேறு எந்த ஒருசிறுபான்மைத் தமிழ் மகனுவது போட்டியிட முன்வந்தால், இப்படிப்பட்டவரை ஒரு சுயநலவாதியென்றே கணிக்க வேண்டியிருக்கும்.

எனவே 5 லட்சம் சிறுபான்மைத் தமிழரின் நலனைக் கருத்தில் கொண்டு திரு. இராசலிங்கத்தைப் போட்டியில்லாமல் தேசியஅரசுப் பேரவைக்கு அனுப்புவதற்கு முற்போக்கு எண்ணமுள்ள தமிழ்மக்கள் எல்லோரும் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுத்துதவுவார்களென தமிழினம் ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

மாட்டீன் செல்லையா
ஜே. பி.
பண்டத்தரிப்பு.

# தமிழ் இளைஞர் பேரவை தலைவரின்றி இயங்கும்!

## நிர்வாகக் குழுவில் ஐவர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழ் இளைஞர் பேரவையின் புதிய யாப்பமைப்பு நேற்று நடந்த தமிழ் இளைஞர் பேரவை பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

மாவை சேனுதிராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் புதிய யாப்பமைப்பின்படி தலைவர் பதவி ஒழிக்கப்பட்டு ஐவரை உள்ளடக்கிய நிர்வாகக்குழுவால் தமிழ் இளைஞர் பேரவை வழி நடத்தப்படும்.

புதிய யாப்பமைப்பின்படி தமிழ் இளைஞர்பேரவை என்ற நாமத்தில் உதயசூரியன் கொடியுடன் இயங்கவிருக்கிறது.

தமிழ்நாட்டின் இழந்துவிட்ட சுதந்திர ஆட்சி உரிமையை-இறைமையை மீள்வித்துசுதந்திரத்தமிழ்ச்சமதர்ம குடியரசு ஒன்றினை அமைத்து ஆள்வது பேரவையின் நோக்கமாகும். தமிழினத்தின் நிலம்-மொழி - சமயம் - கலாச்சாரத்தை பாதுகாத்து அறிவியல் அடிப்படையில் தமிழ் ஈழமண் இயல்புக்கும் தமிழர் பண்பாட்டிற்கும் ஏற்றதான புதிய சமதர்ம சுதந்திர தமிழ் ஈழத்தை அமைப்பதற்குக் காலத்திற்கு ஏற்ற வழிவகைகளைக் கடைப்பிடித்தல் பேரவையின் கொள்கையாகும்.

உலகில் வெவ்வேறு நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடையே தமிழ் இளைஞர்பேரவையை அமைத்து அந்தந்த அரசுகளுடனுன நட்புறவைப் பலப்படுத்தி தமிழ் ஈழஇலட்சியத்திற்காக உழைத்திட உதவி செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

உலக அரசியலிலும்-தமிழ் ஈழத்துக்கு வெளியாலுள்ள இடங்களிலும் ஏகாதிபத்தியம்-முதலாளித்துவம் - இனவாதம்-அடக்குமுறை - சுரண்டல் என்பவைகளுக்கு எதிராகப் போராடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ் ஈழத்தின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதென்றும் சாதி வேறுபாட்டை ஒழித்து சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அமைப்பான தமிழ் இளைஞர் பேரவை தனித்துவத்துடனும் இயங்கும் உரிமை உடையதாக என்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ் இளைஞர் பேரவையின் உறுப்புரிமை வயதெல்லை 16-35க்கிடையில் அமையும் என்றும் 16 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 'சிறுவர் அணி' அமைக்கப்படும் என்றும் அவ்வாறே அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு மாணவர் அணி அமைக்கப்படும் என்றும் அவ்வாறே மக

(7-ம் பக்கம் பார்க்க)

## ''வாலிப முன்னணிகளை கலைக்க வேண்டும்''

### தமிழ் இளைஞர்பேரவை தீர்மானம்

யாழ்ப்பாணம், செல்

தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர்களை ஆதரிப்பதென்றும், தமிழ் ஈழ இலட்சியத்திற்காக வாக்களிக்கும்படி பொது மக்களிடை பிரசாரம் செய்ய வேண்டுமென்றும். சிறப்பாக உடுப்பிட்டியில் தமிழ் இளைஞர் பேரவையினர் முகாமிட்டு, வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்ற தீர்மானம் தமிழ் இளைஞர் பேரவை பொதுச்சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன,

தமிழீழத்தின் விடுதலையை இலட்சியமாக கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரே இளைஞர் அமைப்பாக விடுதலை அணியாக தமிழ் இளைஞர் பேரவையைக் குறிப்பாக தமிழர் விடுதலைக்கூட்டணியும் தமிழ் இளைஞர்களும் அங்கீகரிக்க வேண்டும்.

தமிழர் விடுதலைக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் வாலிப முன்னணிகளைக் கலைத்து தமிழ் இளைஞர் பேரவையில் ஒரே இளைஞர் அணியாக இயங்கக்கூடியதாக தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்ஈழ இலட்சியத்தை அடையும் விடுதலைப் போரை ஒன்றுபட்டு நடத்த வேண்டிய வேளையில் தேர்தல் நெருங்கி வந்ததும் வாலிப முன்னணிகளைத் ஆரம்பித்து அதன் மூலம் வேட்பாளர்களை நிறுத்துவதை கண்டிக்கின்ருேம். (கி)

# ஆறுகோடி தமிழனும் உரிமை இழந்தே வாழ்கிறன்!

## இந்த நிலை நீடிக்கக்கூடாது

கிளிநொச்சி, திங்கள்
''உலகிலே உள்ள 33 நாடுகளில் வாழ்கின்ற ஆறுகோடி தமிழனும் உரிமை அற்றவர்களாக, நாடு அற்றவர்களாக அடிமைகளாக வாழ்கின்றனர். என்று வட்டக்கச்சி சந்தை மைதானத்தில் திரு. வை. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மறைந்த மாமேதைகளான செல்வா, ஜி. ஜி., திரு, ஆகியோரின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் வண்ணை ஆனந்தன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''இந்நாட்டில் அடிக்கடி தலைதூக்கும் எதேச்சதிகாரச் செய்கைகளே இளைஞர்களை விழிப்புள்ளவர்களாகவும் சுதந்திர வேட்கையுள்ளவனாகவும் தூண்டுகிறது. கடந்த ஏழு ஆண்டு காலத்திலும் தமிழ் மக்களின் உயிர்களைக்குடித்து பிரதேசங்களைப் பறித்து வரும் அரசின் எடுபிடிகளாக சில தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்களை மக்கள் இனம் காணவேண்டும். பேச ஒருமொழி நிற்க ஒருநாடு வணங்க ஒருமதம் இல்லா விட்டால் அந்த இனம் இருப்பதிலும் அழிவது நன்று. என்றும் உரிமைக்காகப் போராடி அழிவதே வரலாறு என்றார்.

திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் 80 ஆண்டுகளாக வேறு கொள்கைகளுடன் கருத்து வேறுபாடுடன் இயங்கி வந்த தமிழ்த் தலைவர்கள், இன்று கருத்து வேறுபாட்டினை மறந்து இழந்த உரிமைகளுக்காக ஒன்றுசேர்ந்து ஒரு கொடியின் கீழ் போர்க்கொடி காட்டும் இவ்வேளையில் வேறுசிலர் இந்த ஒற்றுமையைக் குலைக்கப்பார்க்கிறார்கள். இதற்கு எமது இனம் இறுதிவரையும் இடம் கொடுக்கக்கூடாது. இன்று தமிழன் இலங்கையில்இரண்டாந்தரப்பிரஜையாக வாழ்கிறன். இனிமேலும் இந்த நிலை ஏற்படக்கூடாது. அமரர் திருச்செல்வமும் அமரர் பொன்னம்பலமும் ட்ரயல் அட்பார் வழக்கின்போது தமிழனின் பாரம்பரிய பிரதேச உரிமை கலை, கலாச்சாரம் என்பன பற்றிதொடர்ந்து பல மணித்தியாலங்களாக நீதிமன்றப் பதிவேட்டில்இடம் பெறக்கூடியதாகவும் உலக நாடுகள் அறியும் வகையிலும் எடுத்துக்கூறி, சில சட்டதிட்டங்களால் எம்மையும் காப்பாற்றினார்கள். இதுவே அவர்கள் கடைசியாக செய்த மாபெரும் தொண்டு'' என்று கூறினார்.

திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில், ''தமிழ் மக்கள் ஒன்றிணைந்து இருக்கும் இவ்வேளையில் தேர்தல் என்ற ஒரு ஆசையை வைத்துக் கொண்டு தமிழ்மக்களை பலவீனப்படுத்த சிலர் முனைகின்றனர். இன்று எடுக்கப்பட்டிருக்கும் முது பெரும் அறிஞர்களான பெரியார்கள் விட்டுச்சென்ற இலட்சியங்களை என்ன தியாகங்கள் செய்தும், விடுதலை உணர்வுடன் போராடியும் வாதாடியும் பெற்றே தீரவேண்டும். அமரர் திருச்செல்வம் அமைச்சராக இருந்தபோது நான் கிளிநொச்சி பட்டினசபைத் தலைவராக இருந்தேன். அப்பொழுது வேறு இயக்கத்தைச் சார்ந்திருந்தும்,பாகுபாடின்றி எனது பட்டண சபைக்கு உதவி செய்தமையை நான் மறக்க மாட்டேன். அமரர் பொன்னம்பலம் என்னை தனது இயக்கத்தில் சேர்த்து கிளிநொச்சியில் தனது இயக்க வேட்பாளராக நிறுத்தி 'வன்னிப்பகுதி மன்னன்'', என்றும் ''வன்னிமாடு'' என்றும் அன்பாக அழைத்ததை மறக்கமுடியாது. ஒட்டுசுட்டானில் தந்தைக்கு ஒரு வரவேற்பு விழா நடைபெற்றது. அப்பொழுது நானும் சென்றிருந்தேன். ஒரு ஓரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது தந்தை அவர்கள் என்னை அழைத்து, தன் அருகில் இருத்தியதுமட்டும் அல்ல; அவருக்கு அணியப்பட்ட மலர் மாலைகளின் மலர்களைப்பிடுங்கி எனக்குநீண்டநேரமாகத் தூவியவண்ணம் இருந்தார். இன்று நினைக்கிறேன், ஒரு நேர்மையான அரசியல் வாதிமூலம் நான் வாழ்த்துப்பெற்றிருக்கிறேன். 1970ல் தேர்தல் முடிந்தவுடன் ''கடவுள் காப்பாற்ற வேண்டும்'' என்று தந்தை அவர்கள் சொன்ன போது நான் ஏளனச் சிரிப்புச் சிரித்தேன். இன்று நினைக்கிறேன், ஒரு தீர்க்க தரிசனம் கண்டுதான் அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார் என்று

(7 ம் பக்கம் பார்க்க)

## பாராட்டு

(வரணி நிருபர்)
உடுப்பிட்டித் தொகுதியில் திரு. ரி இராசலிங்கத்தினை கூட்டணிவேட்பாளராக நியமித்ததையிட்டு சாவகச்சேரி தொகுதி சிறுபான்மைத்தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அதன் தேர்தல் நியமனக்குழுவுக்கும் தமது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துள்ளது அவரது வெற்றிக்கு உழைக்க உடுப்பிட்டித் தொகுதிக்கு 50 பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி ஒன்று அடுத்த வாரம் செல்லவிருக்கிறது.

## வேலரும் மயிலரும்




வேலர்: தண்ணீருக்கும் தமிழனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன சொல்லும் பார்ப்பம்?
மயிலர்: தெரியவில்லையே!
வேலர்: தண்ணீர் மூன்று பிழை பொறுக்கும், தமிழன் மூன்றுவேட்பாளரையும் பொறுப்பான்.

சுந்தர்

# 'தந்தை செல்வா வழியில் 'தமிழ்ஈழம்' அமைப்போம்'

கோண்டாவில், திங்கள்
''மறைந்த எம் தலைவர் தந்தை செல்வா அவர்கள் ஒரு தீர்க்கதரிசி. அவர் தனது கடந்த கால அரசியல் வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்து அடிமையுற்று ஆட்சியுரிமையற்று அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுச் சுதந்திர இனமாக வாழ்ந்துகொண்டிருந்த தமிழனுக்காகத் தன்னலம் கருதாது தமிழர் பொதுநலம் பேணிச் சொன்ன கருத்துக்களை வேறு கட்சியினர் கேலிசெய்த போதும், தன் வார்த்தையினின்றும் வழுவிவிடாமல் விடாமுயற்சியுடன் தமிழினத்தின் வளர்ச்சிகாகத் தொடர்ந்து செயற்பட்டார்.''

இவ்வாறு கோண்டாவில் சந்திக்கருகாமையில் அமரர் செல்வாவிற்கு அஞ்சலிசெலுத்துமுகமாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் எழுச்சிக்காகவும் திரு. பொ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சட்டத்தரணி மு.ஆலாலசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:
''தந்தை செல்வா அவர்கள் தமிழர்கள் தவறான வழியில் வழிநடத்திச் செல்வதைக் கண்டு அதை நிறுத்துவதற்காகச் சமஷ்டிக் கொள்கையை முன்வைத்து அன்று ஒரு கட்சியை உருவாக்கினார். ஆனாலும் அன்று இணைப்பாட்சியை விரும்பிய சமஷ்டிக்கொள்கையைக் கொண்ட தனது கட்சிக்குத் தந்தை செல்வா அவர்கள் தமிழர் இணைப்பாட்சி என்றோ அல்லது தமிழர் சமஷ்டி அரசு என்றோ பெயர் கொடுக்காமல் அவர் தம் தீர்க்கதரிசனத்தால் தமிழரசுக்கட்சி எனப் பெயர் சூட்டினார். அன்று தமிழரின் நலன் கருதிச் சிங்கள ஆட்சியாளர்களை நம்பித் தந்தை பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டார். அப்போது எதிர்க்கட்சிகள், ஏன் சேர்ந்தீர்கள் என்று கேட்டபோது தமிழினத்தின் நலனுக்காகத் தான்செய்துகொண்ட ஒப்பந்தத்தை வெளிக்காட்டாமல் பொறுத்திருந்தார். தகுந்த காலகட்டத்தில் ஒப்பந்தத்தை வெளியிட்டார். தமிழ்மக்கள் சிங்களக் குடியேற்றத்தால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அவர் கேட்டபோது சிலர் ஆரவாரித்தனர், கைகொட்டிச் சிரித்தனர். ஆனால் பத்து வருடம் கடந்து தந்தையின் வாயிலிருந்துவந்த தீர்க்கதரிசனத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

1949ல் இந்திய-பாகிஸ்தானியச் சட்டம் உருவாக்கப்பட்டபோது தந்தை எதிர்த்துச்சொன்னதை ஏற்க மறுத்த எதிர்க்கட்சியினர் 1956ல் ஏற்றுக்கொண்டார்கள்''

முன்னாள் யாழ். உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் கூறியதாவது:
''தமிழ்த் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமையைப் பேணுவதற்கு அடிமை வாழ்வு வாழ்வதா? அல்லது விடுதலைபெற்றுத் தமிழ் ஈழத்தை அமைபபதா என்பதே இன்று தமிழ் மக்களுக்குள்ள பிரச்னையாகும்.

''இன்று நாம் எமது தலைவர் செல்வாவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம். ஆனால் தந்தைக்கு அஞ்சலிசெலுத்துவதுடன் எமது பிரச்னை தீர்ந்துவிடாது. தந்தையின் கொள்கையில் இம்மியும் வழுவாது செல்வா காட்டிய பாதையில் அகிம்சை வழியில் தமிழ் ஈழத்தை அமைப்போம். தந்தையின் இலட்சியம் தமிழ் ஈழம். ஆனால் தேர்தல் என்பது பெருஞ்ச்னியன். தேர்தல் வரும் போகும். ஆனால் மக்களின் இலட்சிய வேகம் தேர்தல் அல்ல. பதவி ஆசையல்ல. தனிநாடு கோரிக்கைக்குப் போராடுவதே. பல வழிகளில் பிளவுபட்டிருந்த எம்மைச் சுதந்திர வேட்கையூட்டி ஒரு கொடியில் அர்ப்பணித்த மகானுக்குக் காலம் உள்ளவரையும் ஒற்றுமையைக் கட்டிக்

(7-ம் பக்கம் பார்க்க)

# ''ஒருமாணவனுக்கு கல்லூரி வாழ்க்கைதான் வழிகாட்டி''

## —யாழ். நீதிபதி

யாழ்ப்பாணம், செவ்.
''போட்டிகள் மூலம் தான் ஒவ்வொருவருடைய வீரத்தையும் விவேகத்தையும் வளர்க்க முடியும்'' என ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில், உயர்நீதிமன்ற நீதிபதி எம். எம். அப்துல் காதர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் ஆர்வமும் துடிப்புமுள்ளவர்களாக விளங்க வேண்டும். அதற்கு பாடசாலைகள் நன்கு இயங்க வேண்டும். கல்லூரி வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் நல்லபயனை அளித்து உயர்ந்த பதவிகளை வழங்கி வருகின்றது. இதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் உறுதுணையாக இருக்கின்றார்கள், இதனல் பாடசாலைகளில் கட்டாயமாக பெற்றார் ஆசிரிய சங்கங்கள் இயங்க வேண்டுமென்பது அவசியமாகிறது. ஒவ்வொரு பிரஜையும், நல்லவனாக வருவதும் கெட்டவனாக வருவதும் அவனது கல்லூரி வாழ்விலே அமைந்து விடுகின்றது.'' எனக் கூறினார்.

யாழ; மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசேப் உரையாற்றுகையில், ''முஸ்லிம் சமுதாயத்தவர் அன்புக்கும், சகோதரத்திற்கும் அடிமைப்பட்டவர்கள்முன்னேறிய நாடுகளில் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு இதுவே சிறந்த முறையாகும். மதரீதியில் ஒழுக்கக் கோட்பாடுகள், உண்மையான சமுதாயத்தை ஒரு நிலைப்படுத்தி நற்பிரஜைகளாக்கி வருகின்றது. விளையாட்டுப் போட்டிகளில் ஒருவர் வெல்லலாம். ஒருவர் தோற்கலாம். ஆனால் வெற்றி பெறுபவருக்கு, தான் வெற்றி பெற்றுவிட்டேனென அகந்தை கொள்ளமாட்டான். தனது திறமையை எண்ணிப் பெருமையடைவான். தோற்றவன் மறுமுறை தனது திறமையைக் காட்டி வெற்றியடையலாம் என்று சிந்திப்பான். வெற்றி நிச்சயமாகக் கிடைத்துவிடும். இதனல் ஒருவனது திறமை பளிச்சிடுவதற்கும் சிந்தனை வெற்றியடைவதற்கும், விளையாட்டுப்போட்டிகள் மிக மிக அவசியமானவை'' என்றார்.

இறுதியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி ஏ. ஏ. யோசேப் பிரிசில்களை வழங்கினர். இல்ல விளையாட்டுப்போட்டியில் அலி இல்லம் அதிக புள்ளிகளை பெற்று முதலிடத்தையும், இக்பால் இல்லம் இரண்டாம் இடத்தையும், அபுசாலி இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

# பண்டிதமணியிடம் ஆசி பெற்றார் 'சிவா'

யாழ்ப்பாணம், செவ்
நல்லூர் தொகுதியில் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளராகப் பேட்டியிடவிருக்கும் திரு. எம். சிவ்சிதம்பரம் சனிக்கிழமையன்று நல்லூர் முருகனைத்தரிசித்த பின்னர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்களிடம் சென்று ஆசிபெற்றார்.

''திருவருளைச் சிந்தித்து வணங்குவோமாக, நீதி, மந்திர சக்தியினும் பல மடங்கு வாய்ந்தது.தேய்வத்துக்குப்புனிதமான தொருறைவிடம் என்றால் அது நீதியேயாம், ஒவ்வொரு சிந்தனையிலும் ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு சொல்லிலும் நீதி திறம்பாது ஒழுக வழிப்படுத்தி அருள்க என்று வேண்டுதல் செய்து தெய்வத்தைப் பிரார்த்திப்போமாக. இந்தப் பிரார்த்தனையே நாம் செயற்பாலதாகிய செய்தவம்'' என பண்டிதமணி சிவசிதம்பரத்துக்கு ஆசி வழங்கினார்.

திரு. சிவசிதம்பரம் யாழ். வளாகத்தில் மாணவர்கள் குழுவினரையும் சந்தித்து ஆலோசனை நடத்தி மலையக மாணவர்களுக்கும் வேறு சில தமிழ் மாணவர்களுக்கு மிடையில் ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்து வைக்கும் விதத்தில் திரு. சிவசிதம்பரம் இவ் ஆலோசனைகளை நடத்தியதாகத் தெரிகின்றது.

## "ஜி. ஜி. யின்சேவையை தமிழினம் மறக்காது"

யாழ்ப்பாணம், செவ்வாய் "சுருட்டுத்தொழிலாளர்கள் படும் கஷ்டத்தை உணர்ந்து அமரர் ஜி ஜி. பொன்னம்பலம், எமது வேண்டுகோளை ஏற்று, அகில இலங்கை ஐக்கிய இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின்கீழ் இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபித்தார். உற்பத்திவரியை 5 வீதத்திலிருந்து ஒரு வீதமாக்கினர். தொழில் நீதிமன்றத்தை யாழ்ப்பாணத்தில் அமரச்செய்தார். அவர்செய்த சேவையை தமிழினம் என்றும் மறக்காது."

சுதுமலையில் நடந்தபிரசாரக் கூட்டத்தில் மானிப்பாய் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி அபேட்சகர் திரு சி. முதலியார் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டத்தில் சுருட்டுத் தொழிலாளர்கள் திரு. முதலியாரிடம் கட்டுப்பணத்தைக் கையளித்தனர்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. க விஸ்வலிங்கம் பேசுகையில், சுருட்டுத் தொழிலாளர்களுக்காக எவ்வித ஊதியமும் இன்றிப்பணியாற்றி வரும் திரு. முதலியாருக்கு 6000 சுருட்டுத்தொழிலாளரும் அவர்களது குடும்பங்களும், உறவினர்களும், வெற்றி பெற்றுக்கொடுக்க வேண்டும் எனக்கூறினர்.

திரு. வி. அன்னலிங்கம், திரு. ந. சோமசுந்தரம் ஆகியோரும் பேசினர்கள். (க-அ)

## மின்சாரக்கட்டணத்தை எங்கு செலுத்துவது?

பண்டத்தரிப்பு, திங்கள் பண்டத்தரிப்புப் பட்டண சபை மின்சாரம் விநியோகித்தமைக்காகச் செலுத்தவேண்டிய கட்டணத்தை உரும்பராய் ஊரெழு பட்டணசபை அலுவலகத்தில் செலுத்த வேண்டும் என்று பண்டத்தரிப்பு பட்டணசபையினர் தமது எல்லைக்குள் இருக்கும் மின்சார பாவனையாளர்களுக்கு அறிவித்தல் அனுப்பியிருப்பதையிட்டு பலர் எமது நிருபரிடம் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதத்திற்கான மின்சார விநியோகம் பற்றிய விபரப்பட்டியல் அஞ்சலட்டை மூலம் மேற்படி பட்டண சபையினரால் மின்சார பாவனையாளர்களுக்கு அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டதாம். அதில் "காசோலைகள் காசுக்கட்டளைகள் யாவும் மின் வாடகை இலக்கத்துடன் தலைவர், உரும்பராய்-ஊரெழு பட்டணசபை என எழுதப்பட்டு பட்டண சபை அலுவலகம் உரும்பராய் என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

பண்டத்தரிப்பிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள உரும்பராய்-ஊரெழு பட்டண சபைக்குச்சென்று மின்வாடகைப் பணம் செலுத்தவேண்டியிருப்பதாகப் பாவனையாளர்கள் அலுத்துக்கொள்கின்றனர். (அ)

## நிதி அன்பளிப்பு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கட்டிட நிதிக்கு சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தின் சார்பில் நிதி வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற இச்சனசமூக நிலையத்தின் கலை விழாவின்போது அங்கு சொற்பொழிவாற்ற வந்திருந்த ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையாவிடம் இந்த நிதி வழங்கப்பட்டது. (அ)

......

## பொலிஸாரைக் கண்டதும் மிரண்டனராம்

யாழ்ப்பாணம், செவ். மாடு திருடியதாகக் கூறப்படும் நபர் ஒருவரை பொலிசார் விரட்டிப்பிடித்தனர்.

சம்பவ தினத்தன்று அதிகாலை 3-30 மணியளவில் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனுப் இ.ஏ.ஏ. காதர், கான்ஸ்டபிள் கனேகொட சகிதம் உரும்பராயில் ரோந்து சுற்றுலவில் ஈடுபட்டிருந்தார்.

அந்நேரம் சந்தேகத்துக்கிடமான விதத்தில் மாடு ஒன்றுடன் வீதியில் வந்து கொண்டிருந்த நபர் ஒருவரை இன்ஸ்பெக்டர் தடுத்து நிறுத்தியபோது அவர் மின்னல் வேகத்தில் தப்பியோட முயன்றாராம்.

பொலிசார் அவரை விரட்டிச் சென்று பிடித்தனர்.

ரி.சின்னத்தம்பி என்ற பிரஸ்தாப ஆனைக்கோட்டை வாசி சந்தேகத்தின் பேரில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

உரும்பராயில் இம் மாடு திருடப்பட்டதாக பொலிசாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (உ. [illegible])

# உள்ளத்துக்கும் உடலுக்கும் நன்மைபயக்கும் சித்தவைத்தியம்

### ஆயுர்வேத கருத்தரங்கில் டாக்டர் கந்தையா

யாழ்ப்பாணம், செவ் காலத்தால் தொன்மையும் சிறப்பும் மிக்க சித்தவைத்திய முறை உள்ளத்துக்கும் உடலுக்கும் நன்மை பயக்கும் பல சிறப்பாம்சத்தைக் கொண்டது. சித்தவைத்தியம் என்று கூறும்போது அது தமிழ் வைத்தியமெனப் பொருள்படும். பல்வேறு தமிழ்க் கலைகளில் சித்தவைத்தியமும் ஒன்று. அது எமது கலாச்சாரத்தால் பின்னிப்பிணைக்கப்பட்டது. காலத்தால் மூத்த இவ்வைத்தியம் அதிசயசித்துக்கள் கொண்ட சித்தர்களால் வளர்க்கப்பட்டமையால் சித்த வைத்தியம் எனப் பெயர் பெறலாயிற்று.

இவ்வாறு யாழ். ஆயுர்வேத ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் என். கந்தையா கூறினர்.

கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு மண்டபத்தில் நடைபெற்ற சித்தஆயுர்வேத கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜய பாலா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் டாக்டர் கந்தையா மேலும் பேசுகையில் கூறியதாவது;

சொந்த விருப்பு வெறுப்புக்களையும் தன்நல நோக்கங்களையும் விடுத்து இன்றைய சகல சித்தவைத்தியர்களும் ஒருங்கிணைந்து உயர்வுதாழ்வின்றி அதன் தொன்மை கெடாது தற்கால நவீன முறைக்கேற்ப செயலாற்ற வேண்டும். மேலைத்தேய ஆட்சியினரால் அடிமைப்பட்டிருந்த நாம் அவர்களின் நாகரிகத்திலும் அவர்களின் பழக்கவழக்கங்களிலும் மயங்கியிருந்த காரணத்தாலும் நமது பாரம்பரிய சித்தவைத்தியம் சீர்குலைந்திருந்தது. ஆனல் இன்று அரசின் முயற்சியினல் சித்தஆயுர்வேத யூனனி முறைகள் பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்ந்துவிட்டன. எனவே அதன் தனித்துவம் தலைதூக்கும் காலம் ஆரம்பித்துவிட்டது. எனவே வைத்தியப் பெருமக்களாகிய நாமும் அதற்கேற்ப எமதறிவையும் சிகிச்சை முறைகளையும் உயர்த்த வேண்டிய நிலையிலுள்ளோம்.

### ஆராய்ச்சி வரலாறு

தமிழ் கலாச்சாரம், தமிழ் மக்கள் பாரம்பரியம், பழக்க வழக்கம், அவர்தம் உணவு, உடை முதலியவைகளை நேசிக்கும் நாம் இவ்வைத்திய முறையையும் ஆராய்ச்சி செய்தல் அவசியமாகின்றது. எனவே தமிழ் ஆராய்ச்சி செய்யும் வல்லுநர்கள் இவ்வைத்திய முறையைம் ஆராய்ச்சி செய்தல் அவசியமாம். ஏனெனில் இவ்வைத்திய முறைகள் உயர் தமிழில் பாடப்பட்டிருப்பதாலும் வெண்பா, கலிகள், கொச்சகக்கலிப்பா ரூபத்தில் செய்யுளாக இருப்பதாலும் சாதாரண அறிவுள்ளோர்க்கு சற்றுக்கடினமாக இருக்கலாம். எனவே தமிழ் அறிஞர்கள் வைத்தியப் பெருமக்களோடிணைந்து ஆராய்ச்சி செய்தல் அவசியம்.

இக்கருத்தரங்கின் நோக்கம் பண்டைய சித்தவைத்தியர்களின் பாரம்பரிய சிகிச்சை முறைகளை சிறந்தமுறையில் நடத்தவும், வைத்தியர்களின் ரோகங்களைப்பற்றிய அறிவைக் கூட்டுவதோடு அவற்றை வெவ்வேறு ரோகங்களுக்கு எவ்வாறு பயன்படுத்தி சிகிச்சை செய்து மக்களுக்குச் சேவை செய்வதே ஆகும் என்றும் கூறினர்.

அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபாலா பேசுகையில் கூறியதாவது:

சித்தஆயுர்வேத முறைகளைக் கொண்டு நவீனமுறையில் சோவியத்யூனியன் பல்கேரியா முதலிய நாடுகளில் மருந்துகள் தயாரிக்கிறார்கள். நாமும் அடிப்படையை மாற்றாமல் நவீனமுறையில் மருந்து வகைகளைத் தயாரிக்க முடியும்.

ஆயுள்வேத திணைக்களம் இலங்கையின் அனைத்து இடங்களில் கருத்தரங்குகள் நடத்துகிறது. இதனல் அவ்வப்பகுதியிலுள்ள வைதியர்கள் தங்களுக்கிடையில் உள்ள சந்தேகத்தை நீக்கவும் ஒவ்வொருவருடைய சிகிச்சை முறைகளையும் அவரவர் செய்த ஆராய்வுகளையும் மற்றவர்கள் அறிந்து பயன்பெறக் கூடியதாக இருக்கும்.

டாக்டர் ஏ. நடராசா சுரரோகத்தின் குணங்கள், இனங்கள், சிகிச்சைகள் முதலியவைகளைப்பற்றி ஆராய்ச்சியுரை நிகழ்த்தினர். வந்திருந்தவைத்தியர்கள் சுரரோகம் சம்பந்தமான கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர், வைத்தியாச்சாரி எஸ். ஏ. குஞ்சிதபாதம் நன்றியுரை கூறினர்.

## யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பல சாதனைகளை ஏற்படுத்தியுள்ளன

### யாழ். அரசாங்க அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ். 'கூட்டுறவு இயக்கம் புனரமைப்பு செய்யப்பட்டபின்னர், அது பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி மக்களுக்கு அதிகளவு சேவை ஆற்றிவந்துள்ளது. பலவிதமான கஷ்டங்களுக்கு மத்தியிலும் நல்லபல நடவடிக்கைகளை மேற்கொண்ட கூட்டுறவு இயக்கத்துக்கு மக்கள் ஆதரவு கொடுத்துவந்துள்ளார்கள். இதனல் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல சேவையாற்ற முடிந்தது"

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றிய யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபாலா மேற்கண்டவாறு கூறினர்.

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டத்தலைவர் திரு. அ. கந்தையா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது, போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபாலா தொடர்ந்து உரையாற்றுகையில்; 'முன்னாள் கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். கே. சூரியாராச்சியின் திட்டத்தின் கீழ்நடாத்தப்பட்ட இப்போட்டி பலவீனமடைந்திருந்த சங்கங்களை உற்சாகப்படுத்தியுள்ளது. மாவட்ட கூட்டுறவு அதிகார சபைகள், பல உபயோகமான விடயங்களை பலவித சீர்திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளன. யாழ். மாவட்டத்தை பொறுத்தமட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த பல சாதனைகளை ஈட்டியுள்ளன. இந்த சாதனைகளின் சிகரமாக வீரசிங்கம் மண்டபமே திகழ்கிறது' என்றார்.

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஜெகநாதன் பேசுகையில் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் நடவடிக்கையால் வளர்ச்சி காணக்கூடியதாக விருந்தது. ஒருசில சங்கங்களைவிட மற்றைய சங்கங்களில், ஊழியர்களின் ஆர்வத்தையும் பொறுப்புத் தன்மையையும் காணக்கூடியதாகவிருக்கிறது மூளாய் ஆஸ்பத்திரி மீண்டும் இயங்கச் செய்தபெருமை அரசாங்க அதிபருக்கே' என்று பாராட்டினர்.

இப்பரிசளிப்பு வைபவத்தை தொடர்ந்து முதல் மூன்று இடங்களையும் பெற்ற சங்கங்

(7ம் பக்கம் பார்க்க)

## அஞ்சலிக்கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய் தந்தை செல்வாவின் அஞ்சலிக்கூட்டம், இன்று நெடுந்தீவு துறைமுகத்துக்கு அருகில் நடைபெறும். திரு. எஸ். கோபாலபிள்ளை தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பண்டிதர். கா. பொ. இரத்தினம் உட்பட, விடுதலைக் கூட்டணி பிரமுகர்களும் இளைஞர், மகளிர் பேரவையினரும் உரையாற்றுவர். (செ)



மின்காய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியானல் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமத் எல்.சி 50%

மேற்கு ஜேர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி



மேலும். பொலிமத், திரிப்ஸ், அழுக்கணவன், வெள்ளை ஈ, சிற்றுண்ணி, போஞ்சி ஈ, தத்துக்கிளி அளி புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

பொலிமத் பயிர்களை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளரச்செய்யும்.

பொலிமத் உடன் கெந்தகம் கலக்கப்படாது பயிர்களை பாதுகாக்க நாமதியாது பாவியுங்கள் பொலிமத்.

தயாரிப்பாளர்.

ஹேகெம் லிமிடெட்

400 டீன்ஸ் ரோட் கொழும்பு-10

டெலிபோன் 93563 - 96331

வெலிங்டன் (யாழ். நகர்)
முத்துராமன் சுஜாதா நடித்த
தினசரி 4 காட்சிகள்
**வாழ்ந்து காட்டுகிறேன்**

லிடோ (யாழ். நகர்) போன்: 7693
விஜயகுமார் — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
**சொர்க்கத்தில் திருமணம்**
(கலர்)

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
**நாளை நமதே**
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL (JAFFNA) Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
3-rd CROWDED WEEK
ALAN PRICE
**ALFIE DARLING**
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்
Next Attraction
THE TAMARIND SEED (Color)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15 & 9.45
**RUSSIAN ROULETTE**
Thrilling - Exciting - Demanding
(சில நாட்களுக்கு மட்டும்)

கடைசி வாரம்
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெமினி—சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
**பணமா பாசமா**
3-6-77 முதல் சிவாஜி கணேசனின் **வைர நெஞ்சம்**


யாழ்.வளாக

## விடுதிச்சாலை கட்டட வேலைகள்

யாழ்ப்பாணம், செவ். இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாக மணவர்களுக்கான விடுதிச்சாலை யாழ் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்பாக சுவீகரிக்கப்பட்ட காணியில் நிறுவப்படவிருக்கிறது. இதற்காக வளாகத்திற்கென ஒதுக்கப்பட்ட பணத்தில் 15 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விடுதிச்சாலை ஐந்து மாடிக் கட்டிடங்களையும் சபையில் பகுதி, குளியலறைகள், படுக்கையறைகள் கொண்டதாக அமையும். (கு)

......

## கூட்டுறவுச் —

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் ஆதரவில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இலங்கை தேசிய கூட்டுறவுச்சங்க யாழ். மாவட்ட கிளைச்செயலாளர் திரு. எஸ். பத்திநாதன் நன்றியுரை கூறினார்.

### பரிசுபெற்ற கூ. சங்கங்கள்

யாழ். மாவட்ட அதிகார சபையினுல் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம் முதலாவது இடத்தைப் பெற்று பரிசுத் தொகையாக ரூபா இருபத்தையாயிரத்தையும், இரண்டாவது இடத்தைப்பெற்ற வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம் பரிசுத் தொகையாக ரூபா பத்தாயிரத்தையும், மூன்ருவதுஇடத்தைப்பெற்ற நல்லூர் ப. நோ. கூ. சங்கம் பரிசுத் தொகையாக ரூபா ஐயாயிரத்தையும்பெற்றன, இப்பரிசுகள் காசோலை மூலம் சங்கத் தலைவர்களிடம் அரசாங்க அதிபரினுல் கையளிக்கப்பட்டது. (கு)


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30
**Ransom**

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி-அஞ்சலிதேவி
**வீரக்கனல்**


## தந்தை—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காத்து இன விடுதலைக்கு அர்ப்பணிப்போம்.''

### அமிர் பேச்சு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது; ''தமிழனுக்கு இந்தநாட்டில் ஆட்சி செலுத்த உரிமை உண்டென்று ஆட்சியாளரைக் கேட்ட உலகச் சட்டமேதை ஜி. ஜி. பொன்னம்பலத்தையும் வரலாற்று ரீதியாகத் தமிழன் இந்த நாட்டை ஆண்ட இனம் ஆட்சி செலுத்த உரிமையுண்டென்று ஆட்சியாளருக்கு எடுத்துக்காட்டிய திருச்செல்வத்தையும் தொடர்ந்து தமிழ் ஈழத்தின் தனிப்பெருந் தலைவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வழிகாட்டி தந்தை செல்வாவையும் ஆறு மாத இடைவெளிக்குள் அடுத்தடுத்துப் பறிகொடுத்துவிட்டோம். தந்தையும் தலைவர்களும் இறந்தபோதிலும் அவர் தத்த இலட்சியங்களை நாம் மறக்கப் போவதில்லை. தந்தையின் வழியே நின்று தமிழ் ஈழம் அமைத்தே தீருவோம்.

''இந்தியாவில் முஸ்லிம் இனம் அடக்கப்பட்டபோது இந்துக்களால் அவர்கள் அடிமைகளாக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டபோது ஒரு ஜின்ஞ எழுந்து போரிட்டார். அதேபோல் இலங்கையிலே சிங்கள ஆட்சியாளர்களால் தமிழினம் அழிக்கப்படுகிறது. அடிமை இனமாக்கப்படுகின்றது. சுய உரிமை பறிக்கப்படுகின்றது. நாம் விழித்தெழுந்து போராடுவோம் என்ருர் செல்வா. அங்கு சுதந்திர பாகிஸ்தானை ஜின்ஞ உருவாக்கினர். இங்கு ஒரு சுதந்திர ஈழத்தை நாம் ஒருவாக்குவோம். தந்தையின் கனவை நனவாக்குவோம். இதுதான் தந்தைக்கு நாம் செய்யக்கூடிய இறுதி அஞ்சலியாகும்.''

இவர்களைத் தொடர்ந்து சட்டத்தரணி விஸ்வநாதன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், சட்டத்தரணி யோகேஸ்வரன், வண்ணை ஆனந்தன், உட்படப் பல தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் தொண்டர்களும் உரையாற்றினர்.

....

## ஆறுகோடி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினர்.

அஞ்சலிக் கூட்டத்தில் இருவாளர்கள்: இ. கிருஷ்ணராசா, பா. வெ. ஜெயபாலன், ஐ. திருஞானம், என். இராமச்சந்திரன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

......

## தமிழ்—

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளிர்க்கென 'மகளிர் அணி' அமைக்கப்படும் என்றும் இவைகள் யாவும் தமிழ் இளைஞர் பேரவையின் கீழ் இயங்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ் இளைஞர் பேரவையின் தீர்மானிக்கப்பட்ட பொறுப்புள்ள உறுப்பினர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்குழுவிலும், மத்திய பொதுக் குழுவிலும் அங்கம் வகித்து அவைகளினுல் தெரிவு செய்யப்படும் பொறுப்புகளிலும் உறுப்புரிமை வகிப்பார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (கி)

## ஒலிபெருக்கியின்றி நடந்த கூட்டம்!

யாழ்ப்பாணம், செவ்வாய் நேற்று முன்தினம், யாழ்ப்பாணம் ஐந்துசந்தியில், திரு. வெ.யோகேஸ்வரனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில், கூட்ட அனுமதிக்குரியநேரம் அதிகரித்தால் பொலிஸ் உதவி அதிபர் நேரில் வந்து, ஒலிபெருக்கியை நிறுத்தி விட்டார்.

மக்கள் ஒலிபெருக்கி தேவையில்லை சும்மா பேசுங்கள் என்று கூறியதும் பலத்த கரகோஷத்தின் மத்தியில் வண்ணை ஆனந்தன் இரண்டு மணித்தியாலம் வரை பேசினுர். (கெ)

......

## பண்டிதர் கட்டுப்பணம்

வேலணை, திங்கள் காவலூர்த் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் தேர்தல் கட்டுப்பணம் அவரது ஆதரவாளர்களால் திரட்டப்பட்டு வருகிறது. தமிழ் இளைஞர் பேரவையினரும் பணம் சேர்த்துவருகின்றனர்.

## திருநாவுக்கரசுவின் கட்டுப்பணம்

வட்டுக்கோட்டைத் தொகுதிக் கூட்டணி வேட்பாளர் திரு. த. திருநாவுக்கரசுவின்தேர்தல் கட்டுப்பணத்தை அராலி வடக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளை செலுத்துகிறது.

## நல்லூர் சுயேச்சை பாலசுந்தரம்

நல்லூர்த்தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ஆர். பாலசுந்தரத்தின் கட்டுப்பணத்தை இத்தொகுதி இளைஞர்கள் பலர் கட்டுவதற்கு முன்வந்துள்ளனர். இவரது கட்டுப்பணத்தை இளைஞர்கள் சேர்த்துவருகின்றனர். (அ)

## தேர்த் திருவிழாவில் சூரியா

சுழிபுரம், செவ் சுழிபுரம்பறுளை முருகமூர்த்தி கோயில் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறும். தபால்தந்தி விடமைப்பு அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் வழமைபோல் இம்முறையும் நேர்த்திக்கடனுக அங்கப்பிரதிஷ்டை செய்வார்.

சித்தங்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவிலிலும் இன்று காலை ரதோற்சவம் நடைபெறுகிறது.

## கட்டுப்பணம் செலுத்தினர்

யாழ்ப்பாணம், செவ் வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. நாகலிங்கம் இரத்தினசிங்கம் ஜே. பி. நேற்று ஆதரவாளர் சகிதம் யாழ் கச்சேரிக்கு சென்று தமது கட்டுப்பணத்தை செலுத்தினர். சங்கரத்தையைச் சேர்ந்ததிரு. இரத்தினசிங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதி ஐ.தே. க. அமைப்பாளராகவும், வட்டு. ஊர்மன்ற உபதலைவராகவும் இருந்து வருகிருர். (இ)


மூன்-ஏச் வெளியீட்டாளர்களின் 2-வது புதிய வெளியீடு!
**மக்கள் திலகமும், நடிகர்திலகமும்**
(எழுதியவர்: K. S. குமார்)
இரு பெருந்திலகங்களின் நிறைகுறைகளை நடுநிலமையுடன் ஆராய்ந்து எழுதப்பட்ட அருமையான நூல்! முந்திக்கொள்பவர்களுக்கு மட்டுமே புத்தகம் கிடைக்கும்!! பிரதி 50 சதம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
62 9

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
விஜயவேல் பிலிம்ஸாரின்
**மனிதனும்தெய்வமாகலாம்**
(ஈட்ஸ்மன் கலர்)

''திருவருள்'' புரியும் பக்திரசமான 4 வது வாரம்
ராஜா (யாழ்நகர்) போன்: 7180
தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம்.ராஜன், கிருபானந்தவாரியார் நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின்
**திருவருள்**
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

ஈழநாடு
EELANADU

# இன்று நல்லை முருகனுக்கு ஸ்நபனபிஷேகம்

— மல்லிகாதேவி குலராஜதேவா —

இன்று வைகாசிவிசாகம், முருகனுக்கு உரிய விழாக்களில் முக்கியமானவை சஷ்டி, கிருத்திகை, விசாகம், வைகாசி, விசாக நட்சத்திரத்திற்கு அதிபதி முருகன். சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றிய அக்கினிப் பொறிகள் சரவணப்பொய்கையில் கலந்து ஆறு குழந்தைகளாக மாறிக் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு, உமாதேவியினால் சேர்க்கப் பெற்று, கந்தனுக அவதரித்த திருவிளையாடலை நினைப்பூட்டும்விழாவே இந்த வைகாசித் திருவிழா. இந்தத் திருவிழாவில் முருகனை வழிபடுகிறவர்கள் ஆண்டு முழுவதும் முருகனை வழிபட்ட பலனைப் பெறுவார்கள் என்பது நம்பிக்கை. கலியுக வரதனான முருகனுக்குப் பழனி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், சுவாமிமலை, திருத்தணி முதலிய தலங்களில் இன்றும் லட்சக்கணக்கான மக்களால் இத்தினத்தில் வழிபாடு நடக்கிறது.

எங்கள் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலில் மாதந்தோறும் நடக்கும் விசேட திருவிழாக்களில் இந்த வைகாசி விசாகத் திருவிழாவும் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுகிறது. இன்று அதிகாலையில் ஆறுமுக சுவாமிக்கு ஸ்நபனபிஷேகம், பின்பு நியாஸார்ச்சனை. புது மண்டபத்தில் வெள்ளிப் பீடத்தில் வீற்றிருக்கும் ஷண்முகனுக்கும் நடக்கும் இந்த ஆராதனையைக் கண்குளிரக் கண்டு தரிசிக்கலாம். திருக்குள மண்டபத்திலே நின்று, ஆறுமுகனைத் தரிசிக்கக்கூடிய வசதி பாராட்டுக்குரியது.

ஆறுமுகனின் அருள்கனிந்த திருநோக்கமும், புன்னகைதவழும் திருவாயும், மாதனிதுலங்கும் திருமார்பும், திருத்தாள்களின் பொலிவும், திருக்தண்டைகளின் அழகும், தரிசிக்கும் எல்லோரையும் பரசவமடையச்செய்யும். ஒவ்வொரு முகத்திற்கும் ஒவ்வொரு அர்ச்சகர் பயபக்தியுடன் பூசை செய்து தட்டதீபம், பஞ்சாலார்த்தி முதலிய தீபாராதனை நடக்கும்பொழுது கண்கொள்ளாக்காட்சியாக விருக்கும்.

இவ்வரும்பெரும் காட்சியை யாவரும் கண்டுகளித்து முருகனின் திருவருளைப் பெறுவார்களாக.

## "தனிநாடுதான் ஓரேவழியென 1968ம் ஆண்டில் கூறினேன்"

### மண்டைதீவில் சுயாட்சி நவம்

வண்ணார்பண்ணை, செவ். "தனிநாடுதான் தமிழினத்திற்கு இனிமேல் சரியான பாதை. இதையே தமிழினம் ஏற்கத் தயாராக வேண்டும்" என்று 1968-ம் ஆண்டு நான் ஆட்சி மன்றத்தில் பேசினேன்"

இவ்வாறு மண்டைதீவு மதிஒளி சனசமூக முன்றலில் சனிக்கிழமை நடந்த தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு வ. நவரத்தினம் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. எஸ். கே. துரைராசா தலைமையில் இக் கூட்டம் நடந்தது.

கழகத் துணைச் செயலாளர் திரு. ந. ஸ்ரீகாந்தா, திரு சு. கருணாகரன், திரு. பி. சண்முகநாதன், திரு. த. சண்முகலிங்கம் திரு. அ. தவநாதன் உட்பட பலர் உரையாற்றினர். (அ)

## பிக்கு போட்டி

கொழும்பு, திங்கள் இம்முறைத் தேர்தலில் முதல் தடவையாக ஒரு பௌத்த பிக்கு போட்டியிடுகின்றார்.

பொல்காவலைத்தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடும் வண. பதுலுவல ரத்னஜோதி தேரோ தமது கட்டுப் பணத்தை குருநாக்கலை கச்சேரியில் செலுத்தினார்.

## தமிழ்நாடு தேர்தல்:

# எம். ஜி. ஆர். கட்சிக்கும் எமக்கும்தான் போட்டி

### ஜனதா பிரமுகர் சொல்கிறார்

சென்னை, மே 30 எதிர்வரும் தமிழ்நாடு சபை தேர்தலில் உண்மையான போட்டி எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஜனதா கட்சிக்கும் இடையே தான் என்று ஜனதா கட்சி தலைவர்களில் ஒருவரான திரு. தேஷ்முக் சென்னையில் இன்று தெரிவித்தார். (உ)

# எம்.ஜி.ஆர். கட்சி - காங்கிரஸ் உடன்பாடு ஏற்படாதது ஏன்?

### சவான் விளக்கம்

சென்னை, மே 30 தமிழ்நாடு சட்டசபைதேர்தலில்காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றால் தமிழ் நாட்டின் பழம் பெருமையை நிலைநாட்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் திரு. வை. பி. சவான் இன்று சென்னையில் தெரிவித்தார்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொள்ள முடியாது போனதற்குக் காரணம் அது அதிக ஸ்தானங்களை எதிர்பார்த்ததுதான் என்றார் அவர். [உ)

## ஐ. தே. கட்சியினர் கட்டுப்பணம் செலுத்தினர்

யாழ்ப்பாணம், செவ் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் வடபகுதியில் போட்டியிடும் இருவர் நேற்று தங்களது கட்டுப்பணத்தை யாழ். செயலகத்தில் செலுத்தினார்கள்.

மானிப்பாய்தொகுதிஅபேட்சகர் திரு. எஸ். அலோசியஸ் ரத்தினம், வட்டுக்கோட்டைத் தொகுதி அபேட்சகர் திரு. என். ரத்தினசிங்கம் ஆகிய இருவருமே கட்டுப்பணம் செலுத்தியவர்களாவர்.

மானிப்பாய் தொகுதியிலுள்ள ஐ. தே. கட்சி கிளைகள் பல கட்டுப்பணத்தை செலுத்த முன்வந்ததினால் திருவுளச் சீட்டின்மூலம் தெரிவு செய்யப்பட்டது. சுன்னாகம் ஐ. தே. கட்சி கிளையினரால் மேற்படி பணம் செலுத்தப்பட்டது. ஐ. தே. கட்சி ஆதரவாளர் அங்கத்தவர் புடைசூழ வேட்பாளர் நேற்று யாழ்ப்பாணம்தேர்தல்கந்தோரில் கட்டுப்பணத்தை செலுத்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கிளிநொச்சி தொகுதியில் திரு. கனகசூரியரும் ஊர்காவற்றுறையில் திரு. அமிர்தலிங்கமும் போட்டியிடுகின்றார்கள்.


## விற்பனையாளர் தேவை

மண்டைதீவு, நயினதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் முற்பணம் செலுத்தக் கூடிய 'ஈழநாடு' விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும்.

நிர்வாகி
'ஈழநாடு'
யாழ்ப்பாணம்.


## அமிர்—

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

தின் சின்னமென்றும் தேர்தல் அலுவலகங்களிலும் வேட்பாளர்களின் வாகனங்களிலும் மாத்திரமே இக்கொடியைப் பயன்படுத்தமுடியும். எனவே வேறு இடங்களில் இக்கொடியைத் தொங்கவிடுவது சிறப்பல்லஎன்றும்தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கமும் மு. சிவசிதம்பரமும் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர். (உ-ம)

## கூட்டணி —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னத்திலும் போட்டியிடுவார்கள்.

திரு. வி. நவரத்தினம் தலைமையிலான தமிழர் சுயாட்சிக் கழகமும், திரு. சி. சுந்தரலிங்கம் தலைமையிலான 'ஈழத் தமிழ் இன சுதந்திரமுன்னணி'யும் தேர்தல் ஆணையாளரிடம் உதயசூரியன் சின்னத்தைக் கோரியுள்ளது. இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உதயசூரியன் சின்னம் கிடைப்பதில் சில சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கூட்டணி தலைமைப்பீடத்தினால் நேற்று முன்தினம் சகல கூட்டணி வேட்பாளர்களுக்கும், விடுதலைக் கூட்டணி தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ்அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

தேர்தல் ஆணையாளர் தமிழர் விடுதலைக் கூட்டணியை அரசியல் கட்சியாக அங்கீகரிக்காத பட்சத்தில் தமிழரசுக் கட்சியினர் 'வீடு' சின்னத்திலும் தமிழ்க்காங்கிரஸார் 'சைக்கிள்' சின்னத்திலும் போட்டியிடுவார்கள். இதற்கான அனுமதி தமிழரசு, தமிழ்க்காங்கிரஸினால் வழங்கப்பட்டுள்ளது. (க)

## வழமைபோல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்று வருகின்ற போதிலும் சில இடங்களில் சிறிது தாமதம் ஏற்பட்டு வருவது தவிர்க்கமுடியாததாகி விடுகிறது. என்று தபால் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

## "குற்றம்பொறுக்கும்பெருங் குணமுடையவன் இறைவன்"

- சிவத்தமிழ்ச்செல்வி

புங்குடுதீவு, திங்கள் "தானே வந்து நம் உள்ளம் புகுந்து நம்மை அடிமையாக்கும் ஆண்டவன் நம்முடைய குற்றங்களைப் பொறுக்கும் பெருங்குணங் கொண்டவன். அவனுடைய பெயரால்ஆலயங்களிலேநடைபெறும் அபிஷேகம்அலங்காரம் அர்ச்சனை ஆராதனை முதலியவைகள் அவனோடு நம்மைக் கலக்க உதவும் சாதனைகளாகும். கடவுளை நினைந்துருகும் அடியார்களைச் சிவன் பாதத்தைச் சிந்திக்கவும் வந்தித்து வாழவும் உணர்வூட்டுகின்ற உயரிய கருத்துகளை- உள்ளடக்கிய கட்டுரைகளை தாங்கி வெளியாகும் கும்பாபிஷேக மலர் பலவகையாலும் சிறப்புடையது"

புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவிலில் நடந்த மண்டல பூர்த்திவிழாவில் வெளியிடப்பட்ட கும்பாபிஷேக மலரை ஆய்வுரைசெய்த பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார். பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

புலவர்ஈழத்துச்சிவானந்தன் பேசுகையில், "இறைவனைப் போற்றுவதாலும் புகழ்வதாலும் நம்முள்ளங்களிலே குடிபுகுந்திருக்கும் பொய்களெல்லாம் போயகன்று மெஞ்ஞானம் உருவாகி மெய்ம்மையாளர்களாகத் திகழமுடியும். பொய்கெட்டு மெய்யாக நமக்கு உதவும் சாதனங்களுள் தோத்திர சாத்திரங்களோடு அவற்றைத் தெளியவைக்கும் விளக்க உரைகளும் உதவுகின்றன" என்றார்.

ஆத்மஜோதி நா. முத்தையா பேசும்போது, சைவப் பெரியார்களுக்கும் சைவ இளைஞர்களுக்கும் பயன்படுவதோடு, வயது குறைந்த சிறார்களும் படித்து மகிழத்தக்க பல அம்சங்கள் இம்மலரில் இடம்பெற்றிருப்பது பாராட்டுக்குரியது என்றார்.

சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், ஆசிரியர் சி. மாணிக்கம், சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் ஆகியோரும் உரையாற்றினர். க. மகாதேவாக்குருக்களுக்கு பட்டமளித்து தங்கப் பதக்கமும் அன்பளிப்புச்செய்யப்பட்டது. (அ)

## பிரச்னைகளுக்குத் தீர்வுகாண சங்கம் அவசியம்

யாழ்ப்பாணம், செவ் "ஓய்வூதியம் பெறும் அங்கத்தவர்கள் முறையீடுகளையும் பொதுவான பிரச்னைகளையும் அணுகி நிவாரணம் பெற ஒரு சங்கம் முக்கியம். கருத்தரங்குகள் நடத்தியும் பிரச்னைகளைத் தீர்க்கலாம். இப்பொழுது ஓய்வூதியம் பெறவுள்ள ஆசிரியர்களது கஷ்டங்களை நீக்குவதே ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் சங்கத்தின் முக்கியநோக்கமாகும்".

அகிலஇலங்கை ஓய்வுபெற்ற ஆசிரியர்சங்கக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப்பேசிய அகில இலங்கைத் தமிழாசிரியர்சங்க முன்னாள் தலைவர் திரு. ஆர். கந்தையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மலாயா இலங்கையர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்ட வரலாற்றினைச் செயலாளர் திரு. க. இ. குமாரசாமி சமர்ப்பித்துஅதனையொட்டிய சிறப்பம்சங்களை எடுத்து விளக்கினார்.

பண்டிதர் ச. பொன்னுத்துரை பேசுகையில் "அரசாங்க ஊழியர் சங்கங்கள் 'தமது சம்பள உயர்வுக்குப் போராடுகின்றன. வாழ்க்கைச்செலவு உயர்வுக்குத்தக ஓய்வூதியம்பெறும் ஆசிரியர் சங்கங்கள் முயற்சி செய்யலாம். கல்வித்திணைக்களங்களில் உள்ள குறைபாடுகளையோ, பாடசாலைகளில் உபயோகிக்கும் புத்தகங்களில் காணப்படும் குறைநிறைகளையோ ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் சங்கமும் எடுத்துக் காட்டலாம்' என்றார்.

நடப்பு வருட உத்தியோகத்தர் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. இ. கந்தையா, உபதலைவர்கள்: திரு. ந. சண்முகதாசன், திரு. டானியல் ரேச், காரியதரிசி: திரு. க. இ. குமாரசாமி, உபகாரியதரிசி: திரு. க. சின்னத்துரை. நிர்வாகசபை உறுப்பினர்கள்; திருவாளர்கள்: பண்டிதர் ச. பொன்னுத்துரை, ஆர். ரி. சுப்பிரமணியம், இ. டி. சுப்பிரமணியம், கே. எஸ். இராசேந்திரம். நா. முத்தையா, வே. சங்கரப்பிள்ளை, இ. பொ. குமாரசாமி சி. சண்முகநாதன், செ. சரவணமுத்து. எண்பார்வையாளர்: திரு து. திசைநாயகம். (அ)

## பனைவெல்ல உற்பத்தியில் பாதிப்பு

(வரணி நிருபர்,

இலங்கை உரக்கூட்டுத்தாபன வேலைநிறுத்தக்காரணமாக வடபகுதியில் பனங்கட்டி உற்பத்திவேலைகள் ஸ்தம்பிதநிலையடையும் கட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

கருப்பநீரிலுள்ள சுண்ணம்பினை அகற்றுவதற்குபாவிக்கப்படும் 'சுப்பர் பொஸ்பேஸ்ட்' எனும் இரசாயனக் கலவையின்றி பனங்கட்டியினை நல்ல பதத்தில் உற்பத்தி செய்ய முடியாது. இது கிடைக்காது பனங்கட்டி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ் மாநகர தெங்கு பலப்பொருள் சங்கம் மொத்தமாக வத்தளையில் கொள்வனவு செய்து ஏனைய சங்கங்களுக்கு விநியோகித்து தந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேலேவீதி 63-ம் இலக்கத்[illegible] அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 31 ந். திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered [illegible] News paper in Sri Lanka.